20 காசு

# காஞ்சி

7-69 நிறுவனர்: அண்ணாதுரை

## உள்ளே....

வாழ்க தமிழகம்-
வருக திராவிடம்! (மடல்)

காலங்கள் சாவதில்லை! (கதை)

சாத்தூர் இடைத் தேர்தல்! (தலையங்கம்)

கவிதைகள்!

கைவினைப் பொருள்கள்-
ஒரு கண்ணோட்டம்! (கட்டுரை)

அம்புலியில் உறக்கம்
வருமா; கனவுண்டா? (கட்டுரை)

சமுதாயச் சிந்தனைகள்!

கேட்டீரா சேதி?

## 'இந்தியா' வானதே!

இந்தியா என்றபேர் எந்தநாள் வந்தது?
சிந்தனை மிக்கநீர் செப்புவீர்!
ஆடை யுடுக்கவும் அறியா நாளிலே
கூடி வாழ்ந்ததோர் 'குடும்பமாம்' என்றால்
'இலெமூரி யா வெனக் கூறுவர் அறிஞர்!
அலைவினை யாடும் அழகிய குமரியும்,
இலங்கையும், ஒன்றாய் இருந்தது அங்கு;
பரவிப் பாய்ந்ததாம் 'பஃறுளி' என்றால்;
'நாவலந் தீவென' நானிலம் நவிலும!
ஆவலாய் வேற்றினம் ஆநிரை யுடனே
சிந்து வெளியினை வந்தடைந் திருந்தே
இந்துப் பிரிவும் வேதப் பிளவும்
தந்த நாளிலே 'பரத கண்டம்'
என்ற பெயரே இருர்து வந்தது!
சரித்திர ஏடுகள் சலித்தஅப் போதிலும்
புரிந்திட வில்லை புராதன 'இந்தியா'!

காலம் மாறிக் கலைகளும் மாறிக்
கோலம் மாறிக் கொடும்போ ரெழுந்தது!
வளநில மனைத்தையும் வாளால் விழுங்கும்
உளநிலை கொண்டவர் உள்ளே நுழைநதனர்!
பலப்பல இனத்தவர் பாடிவீ டானது!
அவருள் கிரேக்க 'அலெக்சாண்டர்' என்னும்
ஒருவன் இதனுள் உருவிய வாளுடன்
பொருத வந்தான்; பூவிரி சோலைச்
சிந்து நதியினை 'இண்டஸ்' என்றான்
'இண்டஸ்' எனுஞ்சொல் இந்தியா வானதே!

—கு. க. பிறைசூடிப் பித்தன்,

# காலங்கள் சாவதில்லை

—உடுமலை நன்னன்—

விரைந்து வந்த பஸ் வாய்க்கால் பாலத்தருகே நின்றது. நாகப்பன் பஸ்ஸிலிருந்து இறங்கினான். ஒருவாரமாகத் தன் கிராமத்தைப் பார்க்காமலிருந்த அவனுக்கு ஊருக்குள் கால்வைத்ததும் ஒரு மகிழ்ச்சி ஏற்பட்டது. அந்த மகிழ்ச்சி கிராமத்தைப் 'பார்த்ததனால் மட்டுமல்ல, ஒருவாரம் காணாமலே இருந்த அவனுடைய தங்கையை அவன் பார்த்துச் சுவையாகப் பேசப் போகும் மகிழ்ச்சியும் இணைந்து உள்ளத்தில் இன்ப உணர்வை உண்டாக்கியது.

கடந்தஎட்டுநாட்களாகத் தங்கையைத் தனியே விட்டுவிட்டு வெளியூரிலுள்ள தன் நண்பனுடைய திருமணத்துக்காகப் போய்விட்டான் நாகப்பன். உயிர் நண்பனுடைய திருமணம் என்றதனால் அவன் எட்டு நாட்களும் நண்பனுடனே இருந்தான்.

அவன் அப்படிப் போகும்போது, பக்கத்து வீட்டுக் கடலைக்காரப் பாட்டியிடம் சொல்லிவிட்டுத்தான் போனான்.

"நான் திரும்பி வர்றவரைக்கும் பாட்டி நீதான் என் தங்கச்சிக்குத் துணையா இருக்கணும்."

"ஆகட்டுமடா அப்பா" என்று அந்தப் பாட்டியும் அவனுக்குச் சொல்லி அனுப்பி வைத்தாள்.

நாகப்பன் வீடு வந்து சேர்ந்தான். அவன் வீட்டுக்குள் நுழைந்ததுமே "கண்ணம்மா" என்றான்.

"அண்ணா" என்று எதிர்க்குரல் கொடுத்துக்கொண்டு தங்கை கண்ணம்மா அவனிடம் வரவில்லை.

அவள் வீட்டில் இல்லையா?

விளங்காத ஐயப்பாட்டோடு நாகப்பன்—நடையைக் கடந்து பட்டகசாலைக்குப் போனான்

"கண்ணம்மா!" மறுபடியும் குரல் கொடுத்தான். எந்த பதிலையும் காணோம். நாகப்பன் சமையல் அறைக்குள் போனான், கண்ணம்மா உலையில் அரிசி போட்டுக்கொண்டிருந்தாள்.

"கண்ணம்மா" பாதி அரிசியை உலையில் போட்டவள் சத்தம் கேட்டு அப்படியே நிமிர்ந்து திரும்பினாள். அவள் பக்கத்தில் நாகப்பன் வந்து நின்றான்.

"இப்பத்தான்வர்றியா அண்ணா?" இதைமட்டும் கேட்டுவிட்டு மீண்டும்—உலையில் அரிசி போடக் குனிந்தாள் கண்ணம்மா. அவளுடைய கேள்வியில் ஆர்வம் இல்லை. அண்ணனுடன் பேசுகிறோம் என்ற உணர்வும் இல்லை.

ஏன் இப்படி ஒரு விதமாக இருக்கிறாள்?

நாகப்பனுக்குத் தெரியவில்லை. துள்ளும் உள்ளமாக வந்தவனுக்குத் துன்ப உள்ளமான சாயல் பிறந்தது. என்றாலும் அதை மறைத்துக் கொண்டு "கண்ணம்மா, ரொம்பப் பிரமாதம் கல்யாணம்" என்றான்.

"அப்படியா?" என்றாள் கண்ணம்மா இந்தக் கேள்வியிலும் வறட்சிதான் வெளிப்பட்டது. அதை உணர்ந்து கொண்ட நாகப்பன் பிறகு பேசிக்கொள்ளலாம் என்றெண்ணி அமைதியாக வெளியே வந்து நின்றான். ஆனால் அவன் உள்ளம் அப்படி அமைதியாக இல்லை.

கடலைக்காரப் பாட்டியைப் பார்ப்பதற்காக பக்கத்து விட்டுக்குள் நுழைந்தான்.

நுழைந்தவன் பத்து நிமிஷத்தில் வெளியே வந்தான், அவன் முகத்தில் கோபம் பொங்கிய குறிப்புத் தென்பட்டது.

கண்ணம்மா முகம் கொடுத்து நாகப்பனிடம் ஏன் எதுவும் பேசவில்லை.

தொட்டதற்கெல்லாம் 'அண்ணா அண்ணா' என்று வாய் ஓயாமல் பேசிக்கொண்டே இருப்பாளே இப்போது மட்டும் எதிலும் அக்கறை இல்லாதவளைப் போல பட்டும் படாமலும் சுருக்கமாகப் பேசினாளே ஏன்? அதெல்லாம் வெறுமனே அல்ல காரண காரியத்தோடுதான்.

ஆம், அவள் பேச்சும் செயலும் சுத்தமாக மாற்றம் அடைந்துள்ளன.

ஏதும் புரியாமலிருந்த நாகப்பனுக்கு கடலைக்காரப் பாட்டி சொன்ன பிறகுதான் விஷயம் தெளிவாகப் புரிந்தது.

மூன்று மாதங்களுக்கு முன்பு ஒரு தடவை நாகப்பன் தன் உடல்நோய் சிகிச்சைக்காக வெளியூர் போய் விட்டான்.

அவன் ஊரில் இல்லாத அந்தச் சமயத்தில் நடந்துவிட்ட ஒரு நிகழ்ச்சி அவனுக்கு இப்போதுதான் வெளிப்படையாகத் தெரிந்தது.

அந்த நிகழ்ச்சி?

அதை நினைக்க நினைக்க நாகப்பனுக்குக் நெருப்பில் காய்ச்சிய இரும்புத்துண்டுகளை ஒவ்வொன்றாக விழுங்கியதைப் போலிருந்தது.

சில வினாடிகள்வரை பாட்டி வீட்டு வாசலில் நின்று கசா கூளமான எண்ணங்களில் இருந்த நாகப்பன் தன் வீட்டுக்குப் போய் நடைத் திண்ணையில் உட்கார்ந்தான். அவன் மனத் திரையில்ஒரே ஒரு உருவம் மட்டும் தோன்றவும் மறையவுமாக இருந்தது.

அந்த உருவம்?

வேறு யாருமல்ல,

வளையல்கார வடிவேலுதான்.

வடிவேலும் அதே ஊரைச் சேர்ந்தவன்தான். அவனுடைய தொழில் ஊர் ஊராகச் சுற்றிக்கொண்டு 'வளையலோ வளையல்' என்று வியாபாரம் செய்வது.

அந்த வடிவேலு கண்ணம்மாளை—மூன்று மாதங்களுக்கு முன்பு மாசுபடுத்திவிட்டான்! அது அவனுடைய பலவந்தச் செயல் என்று சொல்ல முடியாது. அவனுக்கும், கண்ணம்மாளுக்கும் ஏற்கனவே ரகசியமான அன்புத் தொடர்பு உண்டு. கடலைக்காரப் பாட்டி அதை சாடையாகத் தெரிந்து "கண்ணம்மாளுக்குக் கல்யாணம் பண்ணி வச்சிடு" என்று நாகப்பனிடம் அடிக்கடி சொல்லத் துவங்கினாள். பொதுவாகச் சொன்னாளே தவிர "வடிவேலுக்குக் கட்டி வை" என்று சொல்லவில்லை. அவள் சொல்லும்போதெல்லாம் ஆகட்டும் பாட்டி" என்று நாகப்பன் நயமாகச் சொல்லிவிடுவான்.

இப்போது என்னடாவென்று காரியம் தலைக்குமேல் போய்விட்டது. கண்ணம்மா மூன்று மாதக் கர்ப்பிணி.

மனிதன் மறைத்துவிடுகிற பல

(4-ம் பக்கம் பார்க்க)



**துன்பந் துடைப்போன்!**

தனக்குக் கிடைக்கின்ற இன்பங்களைக்கூட விரும்பாதவனாகி, மேற்கொண்ட கருமத்தினை முடித்தலையே முழுமுயற்சியாய் மேற்கொண்டு முடிப்போன், தன்னைச் சார்ந்தாரின் துன்பத்தைத் துடைக்கின்ற தூண்போன்றவனாவான்.

—குறள் (615)


# காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

மலர் 5 | 6—7—69 | இதழ் 51


# சாத்தூர் இடைத்தேர்தல்!

அடுத்த கிழமை 12-ம் நாள், சாத்தூர் தொகுதியில் இடைத்தேர்தல் நடைபெறவிருக்கிறது. 1967-ம் ஆண்டு பொதுத் தேர்தலின்போது. இந்தத் தொகுதியை பேரறிஞர் அண்ணா அவர்கள், கூட்டணி ஒப்பந்தத்தின் அடிப்படையில் சுதந்திரா கட்சிக்கு என்று ஒதுக்கிவிட்டிருந்தார்கள். தேர்தலின் முடிவில் சுதந்திராக் கட்சியே வெற்றி வாகையும் சூடிவந்திருக்கிறது. வெற்றி பெற்றவர் அண்மையில் காலமாகிவிட்டதனால் இப்போது மீண்டும் இடைத்தேர்தல் நடைபெறுகிறது.

சென்ற தடவை இத்தொகுதில் காங்கிரசும் சுதந்திராவும் மட்டுமே போட்டியிட்டு காங்கிரசை வீழ்த்தி இருக்கிறது. இம்முறை மேற்கண்ட கட்சிகளோடு, வலதுசாரி கம்யூனிஸ்டு கட்சியும் வரிந்து கட்டிக் கொண்டு வந்து நிற்கிறது

ஒரு இடைத்தேர்தலில், காங்கிரசானாலும், அன்றிக் கழகமானாலும் வெற்றி பெற்றுவிடுவதனாலேயே அரசியலில் மாபெரும் விளைவுகள் ஏதும் விளைந்துவிடாது.

ஆனால் கழகம், கூட்டணி காண முயன்றபோது அதன் தெளிவான, திட்டவட்டமான கருத்து காங்கிரசுக் கட்சி எப்படியும் தோற்கடிக்கப்பட வேண்டும் என்பதாகத்தானிருந்தது. அந்த இலட்சிய எண்ணம் ஈன்று தந்ததுதான் இன்றைய கழக அரசு என்பது மட்டுமல்லாமல், மங்கி மடிந்துகொண்டிருந்த சில அரசியல்களுக்கும் சட்ட மன்றத்தில் ஒரு கணிசமான அளவுக்கும் இடம் பிடித்துக் கொடுத்திருக்கிறது என்பதனை, இத்தனைச் சீக்கிரம் யாரும் மறந்துவிட முடியாது.

இப்போதைய சாத்தூர் இடைத் தேர்தலில் முன்னைப் போலவே, கழகம் சுதந்திராக் கட்சிக்கு விட்டுக் கொடுத்து, காங்கிரசை வீழ்த்த வேண்டிய ஜனநாயகக் கடமையை செயல்படுத்தி இருப்பதுடன், ஒரு தோழமைக் கட்சி என்ற அளவில், அதன் வெற்றிக்கும் அரும்பாடு பட்டுக்கொண்டு வருகிறது.

இடைத் தேர்தல் என்று நிலைமை யேற்பட்டு விட்ட பின்பு, முறையான பேச்சு வார்த்தைகளின் போது, கம்யூனிஸ்டு கட்சி தன் ஒத்துழைப்பைத் தர முன்வராமல், தான் ஏதோ வளர்ந்துவிட்டதைப் போலவும், சாத்தூர் தொகுதியில் தன் வெற்றி நிச்சயம் என்பது போலவும் மூன்றாவதாகப் போட்டியிட வந்திருக்கிறது.

கடந்த முறை சுதந்திரா வேட்பா[illegible] வேட்பாளரைவிட சுமார் 20,000 வாக்குகள் அதிகம் பெற்றிருக்கிறார். இதற்குக் கூட்டணியும் கூட காரணமாக இருந்திருக்கலாம். ஆனால் இப்போது சுதந்திராவை எதிர்ப்பது என்பதன் பேரால், காங்கிரஸ் எதிர்ப்புச் சக்தியினைப் பிளவுபடுத்த நினைப்பது அசல் அரசியல் மோசடி என்றே கருதவேண்டியிருக்கிறது. காலத்துக்கும் இனி கம்யூனிஸ்டுகள் தனித்திருந்தே இயங்கமுடியும் என்ற நம்பிக்கைக் கொண்டிருக்கிறார்களோ என்று எண்ணவும் இடந்தருகிறது.

ஒரு தேர்தல் உடன்பாடு காரணமாக, ஒரு கட்சியை, இன்னொருகட்சி ஆதரிப்பது என்றால், அந்தக் கட்சியின் சட்டதிட்டங்களையும் கொள்கைகளையும் ஆதரிப்பது என்று பொருளாகிவிடாது என்பது கம்யூனிஸ்டுகளுக்குத் தெரியாததல்ல. தெரிந்திருந்தும் சுதந்திரா எதிர்ப்பு என்ற காரணத்தைக் காட்டுவது அறிவு பூர்வமானது என்று ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இந்த நடைமுறை மூலம் மட்டுமேயல்லாமல் கம்யூனிஸ்டு கட்சி, வெளிப்படையான சில தீர்மானங்கள் மூலமும் தன்னை இனங் காட்டிக்கொண்டு வருகிறது.

இவை எல்லாவற்றையும் ஓர்ந்து பார்க்கும் திறம் படைத்தவர்கள்தான் சாத்தூர் தொகுதி மக்கள். சுதந்திராவின் கொள்கை கோட்பாடுகள் பற்றியும், கழகத்தின் கொள்கை கோட்பாடுகள், இரண்டரை யாண்டுக் கால சாதனைகளையும், தோழமைக் கட்சியினரை அரவணைத்துச் செல்லும் பாங்கினையும் தெளிவாகவே உணர்ந்துகொண்டிருக்கிறார்கள். இதுபோலவே பொதுவுடைமைக் கட்சியினரின் மாய்மாலங்களையும் புரிந்து வைத்திருக்கிறார்கள்.

சுதந்திராவின் வேட்பாளராக நிற்கும் திரு. சீனுவாச நாயக்கரை பெருவாரியான வாக்குகள் வேறுபாட்டிலே வெற்றிபெறச் செய்வதன் மூலம், கம்யூனிஸ்டு கட்சியின் "கண் கோளாறு"க்குச் சரியான பாடம் புகட்டுவர் என்பது நிச்சயம்.

இதுபோலவே, ஒரு இடைத் தேர்தலை ஆளும் கட்சிக்கும்—ஆண்ட கட்சிக்கும் எதிர்காலத்தை நிர்ணயித்துக் காட்டும் வழியாக மாற்றியமைக்க முயலும் எல்லாவகையான தகிடு தத்தங்களையும் செய்து, பொய்ப் பிரசாரங்களை முடுக்கி மக்களையும் வாக்காளர்களையும் குழப்பத்தி லாழ்த்த நினைத்துச் செயல்பட்டு வரும் காங்கிரசுக் கட்சிக்கும் சரியான புத்தி புகட்டுவர் என்று எதிர்பார்க்கலாம்.

சாத்தூர் இடைத்தேர்தலில் சுதந்திரா வெற்றி பெறப்போவது உண்மைதான் என்றாலும். அதற்கான கடமைகளை நிறைவேற்றுவதில் கழகத் தோழர்களும், பிற சார்பு மன்றங்களும். துணை மன்றங்களும், சுதந்திராக்கட்சியினரும் செம்மாந்து இருந்துவிடக்கூடாது.

வெற்றி நிச்சயம் என்று தெரிந்த பிறகு, தீவிரம் முன்னைவிட அதிகமாக இருக்கவேண்டும். இடைவிடாது வாக்காளர்களைச் சந்தித்து விளக்கம் தருதல்—வேண்டுகோள்விடுத்தல் மிகுதியும் அதிகரிக்க வேண்டும்.

இவைகளையெல்லாம் சீராகச் செயல்படுத்துவதன் மூலம்தான் ஜனநாயகக் கடமைகளை மறந்துவிட்டு தலைகால் புரியாமல் தடுமாறிக் கொண்டிருப்போருக்கு நல்லறிவு புகட்ட முடியும்.

2-ம் பக்கத் தொடர்ச்சி

ஈனத்தையும், ரகசியத்தையும் காலமும் மறைப்பதில்லை... அது என்றோ ஒரு நாள் எதையும் வெளிப்படையாகக் காட்டி விடுகிறது. அப்படிப்பட்ட நிலை ஏற்பட்டுத்தான். கண்ணம்மா தன் நிலை முழுதும் சொல்லி. கடலைக்காரப்பாட்டியிடம் வாழும் வழிகேட்டு அழுதாள். அப்போதுதான் அந்தப் பாட்டியம்மாளும் வடிவேலு மீது கண்ணம்மா வைத்திருக்கும் அன்பை அறிந்தாள்,

“எல்லாம் நல்லபடியா நடக்கும் அழாதே” என்று பேத்திக்குச் சொல்வதைப்போல ஆறுதல் சொன்னாள்.

நாகப்பனுக்கு வடிவேலு என்றால் பிடிக்காது. கண்ணம்மா வடிவேலுடன் தொடர்புள்ளவள் என்று லேசாக அறிந்த காலத்திலேயே அதை வெறுத்து கண்ணம்மாளுக்கு எச்சரிக்கை செய்திருக்கிறான் நாகப்பன். அவனைத்தவிர அவளுக்கு சொல்லக்கூடிய ஆள் அந்த ஊரில் யாரும் கிடையாது. தாயோ, தகப்பனோ இருந்தாலல்லவா அதைப் பற்றி நினைப்பதற்கு.

கண்ணம்மா பிறப்பதற்குமுன் தந்தையை இழந்தாள். பிறந்தபின் தாயையும் இழந்தாள்.

அன்றிலிருந்து இன்றுவரை அதாவது வளர்ந்து செழித்து பருவக் கோட்டில் நிற்கும் இன்றுவரை அவளுக்கு தாயும் தந்தையும் உடன் பிறப்பும் எல்லாமே நாகப்பன் ஒருவன் தான்,

“அண்ணா சாப்பிடு”

நடைத்திண்ணையில் உட்கார்ந்து பல கரடுமுரடான நினைவுகளில் தன் நேரத்தைக் கழித்துக்கொண்டிருந்த நாகப்பனிடம் வந்து அவனைச் சாப்பிட அழைத்தாள் தங்கை.

“சோறு.....இருக்கட்டும்” என்று சொல்லிவிட்டு எழுந்து வெளியே போனான்.

“பசிக்கலையா அண்ணா? சாப்பிடாமெ எங்கண்ணா போறே?” என்ற கேள்வியெல்லாம் கண்ணம்மா கேட்கவில்லை. ஆனால் அவள் மனதில் ஒருவித பயம் இருண்டுவந்தது. அண்ணனிடம் முகம் கொடுத்துப் பேசத் துணிவும் இல்லை.

நாகப்பன் வடிவேலு வீட்டுக்குப் போனான். வீடு பூட்டிக் கிடந்தது. ஊரூராக வியாபாரம் செய்பவன் வீட்டில் இருக்க முடியுமா? வடிவேலும் ஒரு ஒண்டிக் கட்டை.

பூட்டிக்கிடந்த வீட்டைப் பார்த்துவிட்டு வடிவேலு! நீ எங்க போனாலும் சரி. உன்னைப்பழி வாங்காமெவிட மாட்டேன்! என்று முணகிக் கொண்டான் நாகப்பன்.

“நாகப்பா நல்லா இருக்கிறையா? யார் இப்படிக் கேட்டது; நாகப்பன் திரும்பிப்பார்த்தான். தூயவெண் பற்கள் வெளியே தெரிய குருசாமி அவன் அருகே வந்தார்.

“வாங்கய்யா, இப்பத்தான் வர்றீங்களா?” என்று குருசாமியைப் பார்த்து கையெடுத்துக் கும்பிட்டான் நாகப்பன்.

“ஆமப்பா, இப்பத்தான் வர்றேன்’ என்று சொனன குருசாமி

“யாரையோ தேடறாப்போல இருக்கே?” என்றார்.

“ஆமாங்க வடிவேலைப் பாக்கலாம்னு வந்தேன்” என்றான் நாகப்பன்.

“மருதூரில் வடிவேலைப் பார்த்தேன்” என்றார் குருசாமி.

“சாயங்காலம் வீட்டுக்கு வர்றனுங்க” என்று சொல்லி குருசாமியை அனுப்பிவைத்துவிட்டு நாகப்பன், மருதூருக்குப் போவதைப் பற்றிய யோசனைக்கு வந்தான்.

குருசாமி மருதூரில் உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றிக்கொண்டிருக்கிறார் ஏதாவது ஒருமுறை இப்படி கிராமப் பக்கம் வருவார்.

நாகப்பன் நேராக மருதூர் பயணப்பட்டான். தங்கையைக் களங்கப்படுத்தியவனை தீர்த்துவிட வேண்டும் என்பதே அவன் நோக்கமாயிருந்தது.

நேராக வீட்டுக்கு வந்து கண்ணம்மாளிடம் “மருதூர் வரை போயிட்டு வர்றேன்” என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டான். “ஏன்...எதற்கு?” என்றெல்லாம் தங்கை கேட்கவில்லை. அவள் மனம் தான் பயந்து கிடக்கிறதே.

மாலை ஆறு மணி சுமாருக்கு. நாகப்பன் மருதூர் போய்ச் சேர்ந்தான். தெருத் தெருவாக வடிவேலைத் தேடி அலைந்தான். நாலு தெருவுக்குள் அடங்கியதல்ல மருதூர், அதுவும் பெரிய ஊர்தான்.

மறுநாளெல்லாம் தேடியும்கூட. வடிவேலு நாகப்பன் கண்களுக்குப் படவேயில்லை. அதனால் நாகப்பனுடைய கோபம் அதிகமாகியது. கூடவே ஒரு சந்தேகமும் எழுந்தது, வடிவேலு வியாபாரம் செய்பவன் ஒரு ஊரிலேயேவா இருப்பான். அவன்தான் பல ஊர்களும் சுற்றுபவனாயிற்றே. என்று பலவாறு எண்ணிக்கொண்ட நாகப்பன் இரண்டு நாள் மருதூரில் தங்கிவிட்டுப் பிறகு கிராமத்துக்கே திரும்பலாமென்று பஸ் நிலையத்துக்கு வந்தான். அங்கே ஒரு பஸ்ஸிலிருந்து தமிழாசிரியர் குருசாமி இறங்கி வெளியே வந்து கொண்டிருந்தார். அவரைப் பார்த்ததும் “ஐயா ஊரிலிருந்து திரும்பிட்டீங்களா?” என்று கேட்டுக்கொண்டே அவரிடம் போனான் நாகப்பன்.

“ஆமா நாகப்பா ... இங்கெங்கே வந்தே?” என்று குருசாமி அவனிடம் திருப்பிக் கேட்டார். அவரிடம் எதையும் மறைக்கக்கூடாது; நடந்ததையெல்லாம் சொல்ல வேண்டும் என்ற முடிவுக்கு வந்த நாகப்பன் ஏதோ சொல்லவாயெடுத்தான்.

“எல்லாம் வீட்டுக்குப் போய் பேசிக்கலாம் வா” என்று நாகப்பனைத் தன் வீட்டுக்கு அழைத்துப் போனார் குருசாமி.

வீட்டுக்குப் போனதுமே குருசாமியிடம் நாகப்பன், தன் தங்கையை வடிவேலு மாசுபடுத்தியதைச் சொல்லி அவனைக் கொலை செய்யப் போவதாகத் தான் கொண்டுள்ள வைராக்கியத்தையும் சொன்னான்.

எல்லாவற்றையும்பொறுமையாகக் கேட்டுக்கொண்டு வந்த குருசாமி அவனுடைய கோபத்தைத் தணிப்பதற்காக முதலில் எதையெதையோ மிக நயமாகப் பேசினார். சிறிது நேரத்தில் சராசரியான மனநிலைக்கு நாகப்பன் வந்துவிட்டதை உணர்ந்தார். பிறகு அவனிடம் கேட்டார்.

“நாகப்பா நீ கொலைகாரனாகப் போறியா?” என்னென்னவோ பேசிக்கொண்டு வந்தவர் என்ன கேள்வியைக் கேட்டுவிட்டார்.

அந்தக் கேள்வி நாகப்பனையே சிறிது அசைத்துவிட்டது.

“தங்கச்சியைக் கெடுத்தவனை என்ன செய்யறது?” நாகப்பன் கேட்டான்.

“கொலை செய்தா பிரச்னை தீர்ந்திடுமா?” குருசாமி திருப்பிக் கேட்டார்.

“மானங்கெட்ட பயலுக உயிரோட இருக்கக்கூடாதுங்க” நாகப்பன் வெறியோடு பேசினான். அவனுக்கு மீண்டும் கோபம் பொங்கி வந்துவிட்டது.

“நாகப்பா நான் சொல்றதைப் பொறுமையாக் கேளு, நீ ரொம்ப

(15-ம் பக்கம் பார்க்க)

# தம்பி


தமிழகம் திருநாள் கொண்டாடுகிறது—தாயகம் விழாக்கோலம் பூண்டிருக்கிறது—திருநாட்டைப் பெற்றோம், இனி இதன் ஏற்றம் வளரத்தக்க வகையிலே பணிபுரிதலே நமது தலையாய கடன் என்று, தமிழ்ப் பெருங்குடி மக்களெல்லாம் உறுதிகொண்டிடும் வாய்ப்புக் கிடைத்திருக்கிறது—கொடியும், படையும், முரசும் அரசின் முறையும் வேறுவேறு எனினும், எல்லா முற்போக்குக் கட்சிகளும், தாயகத்தின் திருவும் திறனும் செழித்திடப் பணியாற்ற வேண்டும் என்பதிலே, முனைந்து நிற்கின்றன — புதிய தமிழகம் கண்டோம், இது புதியதோர் உலகிலே உரிய இடம் பெற்றுத் திகழ்ந்திட வேண்டும்—நாம் அனைவரும் அதற்கான வழியிலே தொண்டாற்றும் திறன் பெறல்வேண்டும் என்ற ஆர்வம் மலர்ந்திருக்கிறது.

நவம்பர் திங்கள் முதல் நாள், புதிய தமிழகம் உருவாகிறது, ஓர் அரை நூற்றாண்டுக் காலமாக, அரசியல் தெளிவும் நாட்டுப் பற்றும் கொண்டோரனைவரும், நடத்தி வந்த இலட்சியப் பயணம், தடை பல கடந்து படை பல வென்று, ஆயாச அடவிகளையும், சஞ்சலச் சரிவுகளையும் கடந்து, வெற்றிக் கதிரொளி காணும் இடம் கொண்டு வந்து சேர்த்திருக்கிறது. இன்று நம் முன் தோன்றி, நம்மை எலாம் மகிழ்விக்கும் இத்தாயகம், புதியதோர் அமைப்பு அன்று — ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இந்த மானிலம் முழுதும், மதிப்புப் பெற்றிருந்த மணித்திருநாடாகும். இடைக் காலத்திலே, இடரும் இடியும் தாக்கின, இழிநிலைக்கு இழுத்துச் சென்று அழுத்திவைக்கப் பட்டிருந்தது; இன்று, கட்டுண்ட நிலைபோயிற்று, தளைகள் நொறுங்கின, தமிழகம் புதிய கோலம் காட்டி நம்மை மகிழ்விக்கிறது.

## வாழ்க தமிழகம்!
## வருக திராவிடம்!

மக்களாட்சியின் மாண்பும் பயனும் மிகுதியும் மொழிவழி அரசு மூலமே கிட்டும் என்று அரை நூற்றாண்டாகப் பேசி வந்தனர் பேரறிவாளர், போரிட்டனர் ஆற்றல்மிக்கோர், அந்த உயரிய குறிக்கோளை அழித்துவிட முனைந்தனர் ஆணவக்காரர், எனினும் எல்லா இடையூறுகளையும் காலச் சம்மட்டி நொக்கித் தூளாக்கிற்று. கருத்துக்கு விருந்தாய் அமைகிறது தமிழகம்.

புதிய தமிழகம்—ஏதேதோ புதுமைகள் நிகழ்ந்திடும் என்று எதிர்பார்த்து வரவேற்கப்பட வேண்டிய ஒன்றன்று—அது ஆட்சி அலுவலைச் செம்மையுடையதாகச் செய்விக்கும் ஒரு வசதி தரும் ஏற்பாடு — வேறல்ல — என்று எண்ணுவோர், புதிய தமிழகம் கண்டு, மக்கள் விழாக் கொண்டாடுவதன் கருத்து யாது? அவர் தம் அகமும் முகமும் மலர்ந்திடும் காரணம் என்ன? என்பதறியாது கிடக்கின்றனர். அட்லிக்கும் ஸ்டீவன்சனுக்கும், அபிசீனிய மன்னருக்கும், அயிசனவருக்கும், இது வெறும் ஏற்பாடுதான்—அரசியல் அலுவலுக்காகச் செய்துகொள்ளப்படும் நிர்வாக அமைப்புத்தான்! அவர்களால், அதற்குமேல் இது குறித்து உணர்ந்திட முடியாது — அவர்கள் தமிழர் அல்லர் என்ற காரணத்தால்,



# 'இச்சொலி'யில் இருப்பது எத்தனை இன்பம்!

தமிழர்க்கோ, தமிழ்நாடு புதிய அமைப்பாகக் கிடைப்பது, மன எழுச்சி அளித்திடுவதாகும். முத்தம் வெறும் 'இச்சொலி'தானே, இதிலென்ன சுவை காண்கிறாய் என்று, தான் பெற்றெடுத்த பாலகனை உச்சிமோந்து முத்தமிடும் தாயிடம் கேட்பார் உண்டா! தமிழர், தமிழகம் கண்டோம் என்று களிநடமாடி, விழாக் கொண்டாடும்போது, இதிலே என்ன பெரிய சுவை கண்டுவிட்டீர்கள், முன்பு இருந்த ராஜ்ய அமைப்பு நிர்வாக காரியத்துக்குக் குந்தகம் விளைவிப்பதாக இருந்தது, அதன் பொருட்டு, இப்போது 'ராஜ்ய சீரமைப்பு' செய்துள்ளோம். இதனாலேயே தமிழர், ஆந்திரர், கேரளத்தார், கருநாடகத்தார் என்றெல்லாம் கருத்திலே உணர்ச்சிகளை வளரவிட்டுக்கொள்ளாதீர்கள், அனைவரும் இந்தியர், அது நினைவிலிருக்கட்டும். யாவரும் பாரத நாட்டினர், அதனை மறந்துவிடாதீர்கள் என்று நேரு பண்டிதர்கூடப் பேசுகிறார்—அவருடைய மனது குளிர நடந்துகொள்வதுதான் இன்றைய அரசியல் சூழ்நிலையில் பலன் அளிக்கும் என்று எண்ணும் பலரும் அதுபோன்றே பேசிடக் கேட்கிறோம்.

தமிழருக்குத் தமிழகம் அமைகிறது என்பதனால் ஏற்படும் எழுச்சி எங்கே, ஊட்டிவிடப்பட்டிருக்கும் பாரதம்—இந்தியர் — என்பன போன்ற போலித் தேசியத்தைத் தேய்த்து, மாய்த்துவிடுமோ, புதிய தமிழகம் என்று பூரிப்புடன் பேசத் தொடங்கி, தாயகம் என்று பெருமையுடன் பேசத் தொடங்கிவிடுவார்களோ என்ற அச்சம், எல்லா தேசீய இனங்களையும் ஒரே பட்டியில் அடைத்து, ஏதேச்சாதிகாரத்தால் ஆட்டிப் படைக்க வேண்டும் என்று திட்டமிட்டிருப்போருக்கு இருக்கத்தான் செய்கிறது. எனவேதான் அவர்கள், அட்லி போலவும் அபிசீனிய மன்னர்போலவும், இதெல்லாம் நிர்வாக ஏற்பாடு என்று கூறுகின்றனர். மாலை விலை ஆறணா என்பது மட்டுந்தான், மலர் — விற்போனால் அறிய முடிந்தது— அதனை மங்கை நல்லாளுக்காகப் பெறுகிற மணவாளன் அல்லவா அறிவான், மாலையைக் கண்டதும் கோலமயில் சாயலாள், குமுதவிழிப் பாவையாள், பாகுமொழியாள், அடையும் மகிழ்ச்சி எத்துணை சுவையுள்ளது என்பதனை. தமிழகம் புதிய அமைப்பாகிறது என்பதிலே காணக்கிடைக்கும் எழுச்சியைத் தமிழர் மட்டுமே முழுதும் பெறமுடியும்—மற்றையோர் முயற்சித்தும் பலன் இல்லை, ஓரளவுக்கு இந்த இயற்கையை அறிய முடிந்ததனாலேயே, நேரு பண்டிதர், காந்தியார் காலத்திலே வாக்களிக்கப்பட்ட திட்டமாகிய மொழிவழி அரசு பற்றி, முகத்தைச் சுளித்தபடி பேசவும், அது என்ன பித்தம் என்று கேலி செய்யவும், அது வெறி அளவுக்குச் சென்றுவிடாமற் பார்த்துக் கொள்ளவேண்டும் என்று எச்சரிக்கை ஏவவும் முற்பட்டார். உலக அரங்கிலே காணக்கிடக்கும் பிரச்சினைகளை அறிந்தவர் உயர்நிலையில் அமர்ந்திருக்கும் நேரு பண்டிதர், தேசீய இன எழுச்சி வரலாறுகளைத் தெரிந்தவர் அழுத்தி வைக்கப்பட்ட தேசீய எழுச்சி, என்றேனும் ஓர்நாள் வெடித்துக் கிளம்பிடும் என்ற பேருண்மையை அறிந்தவர், பல தேசீய இனங்களை தலை தூக்க விடாதபடி அடக்கி ஒடுக்கி ஆட்சி நடாத்தியோர் இறுதியில், என்ன கதியாயினர் என்பதைப் படித்திருக்கிறார். தேசீய இன எழுச்சியை அலட்சியப்படுத்தும் அறிய மறுக்கும், அப்பாவிகள், பட்டியலில் அவர் பெயரை அறிவிலியும் சேர்த்திடத் துணியமாட்டான். அவர் காண்கிறார், மேலை நாடுகளிலே, காலம் கிடைத்ததும், புயலெனக் கிளம்பிடும் தேசீய இன எழுச்சிகளை. எனவே, நேரு பண்டிதர், 'மொழிவழி அரசு' எனும் திட்டம், மெள்ள மெள்ளக்கூட அல்ல, வேகவேகமாக தனி அரசு எனும் கட்டத்துக்கு வழிகோலும் என்பதை உணர்ந்திருக்கிறார். எனவேதான், முடிந்த வரையில், மொழிவழி அரசு எனும் திட்டத்தை அமுலாக்குவதில், தாமதம், தயக்கம் காட்டினார், காலத்தை ஓட்டினார், பிறகு கட்டுக்கு அடங்காத நிலை கிளம்பும் என்பதற்கான குறி தோன்றியதும் மொழிவழி அரசு எனும் திட்டத்தை மூளியாக்கியே தந்திருக்கிறார் மூளியாக்கப்பட்ட நிலையிலும், மொழிவழி அரசு என்பது, புதியதோர் நம்பிக்கையை ஊட்டும் என்பதையும் அறிந்து, பாரதத்தை மறவாதீர்! இந்தியர் என்பதை நினைவிலே கொள்ளுங்கள்! இதெல்லாம் வெறும் நிர்வாக ஏற்பாடு! என்று பன்னிப் பன்னிக் கூறுகிறார் — அவருக்குப் பக்கம் நின்று அதே பல்லவியைப் பாடப் பல கட்சிகள் உள்ளன.

வாழிய செந்தமிழ்
வாழ்க நற்றமிழர்
வாழிய பாரத மணித்திருநாடு!

என்று அவர்கள் கீதம் இசைப்பது அனைவரும் வாழ வேண்டும் என்ற நல்லறத்தைக் கூறுவதற்காக மட்டுமல்ல — தமிழர்காள்! தமிழகம் பெறுகிறீர்கள்! புதிய அமைப்பு! விழாக் கொண்டாடுகிறீர்கள்! உற்சாகம் பெறுகிறீர்கள்! அதுவரையில் சரி — ஆனால் இந்த உற்சாகத்தை உறுதுணையாக்கிக்கொண்டு தனி அரசு என்று பேச ஆரம்பித்துவிடாதீர்கள்—பாரத மணித்திருநாட்டை வாழ்த்துங்கள்! — என்று கூறி கட்டிவிடப்பட்டிருக்கும் அந்தப் போலித் தேசியத்தைக் காப்பாற்றும் நோக்கத்துடனும்தான், பாடுகின்றனர். பாரத மணித்திருநாடு என்று பாடுவதும், சொந்தம்கொண்டாடுவதும், பரந்த மனப்பான்மை, பண்புக்கு அறிகுறி, தமிழ்நாடு என்று மட்டும் கூறிக்கிடப்பது குறுகிய மனப்பான்மை கிணற்றுத் தவளைப் போக்கு, அறிவீரா? என்று வாதாடுவோர் உளர்! தம்பி! விரிந்து பரந்த மனப்பான்மையைத் தமிழருக்கு எவரும் புதிதாகக் கற்றுத்தர வேண்டியதில்லை! பாரில் இந்தப் பண்பு பேச்சளவுக்கேனும் வளருவதற்குப் பன்னெடுங் காலத்துக்கு முன்பே யாதும் ஊரே, யாவரும் கேளிர் என்று பாட்டு மொழியிற் கூறிய பண்பாளர் தமிழர்! எனவே, பரந்த மனப்பான்மையைத் தமிழர்க்கு அளித்திட ஆசான்கள் தேவை இல்லை—தமிழருக்கு அந்தப் பாடத்தைக் காட்டி, ஓர் பேரரசுக்குக் குற்றேவல் புரியும் எடுபிடி யாக்கிடவே முனைகின்றனர் என்று ஐயப்பாட்டுக்கிடமின்றி தெரிகின்றபோது, எங்ஙனம் அதனை நீதிநெறி விளக்கமென்று கொள்ள முடியும்.

போராற்றலால் பெற்ற வெற்றிகளைப் பேரரசு அமைத்திடப் பயன்படுத்தியவர்களிலே பலரும், தமது இருப்புக் கரத்தின் மூலமே, அந்தப் பேரரசுகளை முடிந்தவரையில் கட்டிக் காத்தனர்—பிறகோ, தேசீய இன எழுச்சி சூறாவளியாகி, சாம்ராஜ்யங்களைச் சுக்கு நூறாக்கி விட்டிருக்கிறது.

கிரேக்க சாம்ராஜ்யம், ரோமானிய சாம்ராஜ்யம், உதுமானிய சாம்ராஜ்யம் என்பவைகளெல்லாம் இன்று

# இச்சகம் பேசி ஏய்க்கப் பார்த்தனர்!

பாடப்புத்தகங்கள்-படித்து அதுபோல் சாம்ராஜ்யங்கள் கட்டப் பயிற்சிபெற அல்ல—பேரரசு வேண்டும் என்று தோன்றும் மன அரிப்பை அடக்கிக்கொள்வதற்கான பாடம் பல பெற!!

நேரு பண்டிதர் இந்த உண்மைகளை நன்கு அறிவார்—அறிந்த காரணத்தாலேயே, அவர், மிகச் சாமர்த்தியமாக நடந்துகொள்வதாக எண்ணிக்கொண்டு, பல்வேறு முறைகளாலும், மறைமுக வழிகளாலும், பாரதம் எனும் பேரரசுக்குள்ளே அடைத்துவைக்கப்பட்டிருக்கும் பல்வேறு தேசீய இனங்களையும், தத்தமது தேசீயத் தன்மையை, நினைப்பை, இழந்துவிடச் செய்யப் பார்க்கிருர். இதனை எதேச்சாதிகாரியின் குரலிலே அவர் கூறவில்லை—வரலாறு தெரிந்திருப்பதால்— இனிக்கப் பேசினுல் இளித்துக் கிடப்பர் என்று திட்டமிட்டுக் காரியமாற்றி வருகிருர்! கேட்போருக்கு மன மயக்கம் ஏற்படச் செய்யும் விதமான பிரசாரம் நடத்தி, இந்தியா—இந்தியர்—என்பனபோன்ற கற்பனைகளைக் கவர்ச்சிகரமானதாக்கிக் காட்டி, போலித் தேசீயப் போதையை ஊட்டி தமிழர் போன்ற தேசீய இனத்தவர்களை தாசர்களாக்கிடப் பார்க்கிருர். மொழி, கலை, ஆகியவற்ருல் தனித் தன்மை பெற்றிருப்பதை அழித்திட இந்தியை ஏவுகிருர்—சல்லாபி வடிவத்தில்!! இந்தியை, அஞ்சல் நிலையத்திலும், அங்காடி அலுவலுக்கும், அரசாங்க காரியத்துக்கும், புகுத்தும் நேரத்திலேயும், தமிழ் என்ன சாமான்யமானதா, உயர் தனிச் செம்மொழி என்று மொழி வல்லுநர் பலர் கூறக் கேட்டுள்ளேன், இந்தி மொழி தமிழ் கொலுவிருக்கும் இடத்தருகேயும் வரத் தகுதியற்றது, என்ருலும், வசதிக்காக, நிர்வாக ஏற்பாட்டுக்காக, பாரதத்தின் ஐக்யத்துக்காக இந்தியைத் தேசீய மொழியாகக் கொள்ளத்தான் வேண்டும் என்று பேசுகிருர்.

கிழப்புலி பொன்காப்பு காட்டிய கதை படிக்கிருர்களல்லவா, சிருர்கள் அதுபோல எதேச்சாதிகாரம் கிழடு தட்டிய பருவத்திலே இவ்விதமான போக்குத்தான் கொள்ளும்.

நேரு பண்டிதர் இந்த வகையிலே, தம்பி, மிகத் திறமையாகப் பணியாற்றி வருகிருர்-என்ருலும் அவருக்கும், உள்ளூரத் தெரிகிறது, எத்தனை முறைகளைக் கையாண்டாலும், எவ்வளவு தந்திரமாக முறைகளைப் புகுத்திஞலும், தேசிய உணர்ச்சி அழிந்துபடாது என்ற உண்மை. மொழி வழி அரசு எனும் திட்டம், மெத்தச் சிரமப்பட்டுத் தாம் தயாரிக்கும் போலித் தேசியத்தை நாளா வட்டத்திலே நைந்துபோகச் செய்துவிடும் என்று அவருக்குப் புரிகிறது. எனவேதான் அவர், மொழி வெறி, மொழி அரசு என்ற பிற்போக்குத் திட்டம் கூடாது, ஆகாது என்று அடிக்கடி பேசுகிருர். இதோ, புதிய தமிழக அமைப்புக்கு, விழா நடத்தப்படுகிறதே, இதன் உட்பொருள் என்ன? கம்யூனிஸ்டுக்கு இந்த விழா மகிழ்ச்சி தருவானேன்? பொது உடைமை பூத்தாலன்ரே விழா, கம்யூனிஸ்டு சித்தாந்தப்படி! புதிய தமிழக அமைப்பினைத் திருநாள் ஆக்கி மகிழக்காரணம்? இதனை அறியாயோ, பேதாய்! பேதாய்! புதிய தமிழக அமைப்பு பொது உடைமை அடைவதற்கான பாதையிலே ஓர் கட்டமாகும்! என்று கடிந்துரைப்பர் கம்யூனிஸ்டுகள்! தம்பி அவர்கள் கோரும் கம்யூனிசம், பாரதம் முழுவதுக்கும்—அகில முழுவதற்கும்—எனவே, அதிலே, தமிழகம் என்று ஓர் எல்லை தேவை கூட இல்லை! எனினும் எல்லை கிடைத்து, புதிய தமிழகம் எனும் அமைப்பு ஏற்பட்டதும், அவர்கள், மகிழத்தான் செய்கிருர்கள்—மகிழ வாரீர் என்று மக்களையேகூட அழைக்கிருர்கள்! ஏன்? அவர்களையும் அறியாமல் அவர்களை ஆட்கொண்டிருக்கும், தேசிய இன உணர்ச்சி என்பதன்றி வேறென்ன! அவர்களிடம் கூருதே, தம்பி, நாம் கூறுவதனுலேயே அவர்களுக்கு அது கசக்கும், அவர்கள் போலந்து, ஹங்கேரி, இப்படிப்பட்ட இடங்களிலேவெடித்து, சிதறி, இங்கு வந்து துண்டு துணுக்குகள் வீழ்ந்த பிறகுதான், இவைகளை உண்மைகள் என்று மதிப்பளிக்க முன்வருவார்கள். நாம் சொல்லியா ஏற்றுக்கொள்வார்கள்!

புதிய தமிழக அமைப்பு, எல்லாக் கட்சியினருக்கும் மகிழ்ச்சி அளிக்கிறது.

ஆச்சாரியார் மட்டும் பாபம், துக்கமாக இருக்கிருர்!

ஐயோ! மெலிந்துவிட்டதே! சிறியதாகிவிட்டதே! சென்னை ராஜ்யம் என்றிருந்தபோது, எவ்வளவோ பெரிதாக இருந்தது—இப்போது ஆந்திரம், மலையாளம், இவை பிரிந்த நிலையில், தமிழ்நாடு என்பது சிறிய அளவாகிவிட்டது—என்று வருத்தப்படுகிருர்.

அவருக்கு இது விழாவாக இல்லை! விசாரப்படுகிருர்!

காரணம் காட்டாமலிருக்கிருரா? அவராலா, முடியாது? காரணம் தருகிருர்!

பாரதத்தில், தமிழ்நாடு எனும் அமைப்பு, மிகச் சிறிய ராஜ்யம்–அதனுல் அதற்குச் செல்வாக்கு மத்திய சர்க்காரில் இருக்காது—பாரதத்தில் உள்ள மற்ற ராஜ்யங்கள் அளவில் பெரிது, அவைகளின் செல்வாக்கு மிகுதியாக இருக்கும் என்று ஆச்சாரியார் காரணம் காட்டுகிருர்.

ஆச்சாரியாரும் நமது கம்யூனிஸ்டு நண்பர்கள் போலவே, 'பாரதம்' எனும் திட்டத்தை ஏற்றுக்கொண்டுதான் பேசுகிருர்.

பாரதத்தில் ஓர் அங்கமாக, தமிழ்நாடு இருக்கிறது, இதன் பலஞக, எதிர்காலம் ஒளியுள்ளதாகும் என்பது கம்யூனிஸ்டு களிப்புடன் காட்டும் வாதம்.

கவலையுடன் ஆச்சாரியார் கூறுவது, பாரதத்தில் ஓர் அங்கமாக அமையும் சென்னை ராஜ்யம், அளவில் மிகச் சிறியது, எனவே அதற்கு மத்திய சர்க்காரில் மதிப்பும் செல்வாக்கும் கிடைக்காது, என்பதாகும்.

சரி, அண்ணு! காமராஜர் என்ன கருதுகிருர் என்று என்னைக் கேட்டுவிடாதே தம்பி, நான் இப்போது, சிந்தித்துக் கருத்தளிக்கக் கூடியவர்களைப் பற்றிக் கூறுகிறேன். எஜமானர்களின் உத்தரவை நிறைவேற்றி வைக்கும் ஊழியம் செய்துவரும் சம்பளக்காரர்களைப்பற்றி அல்ல.

காமராஜரைத்தான் நாடு நன்ருக அறிந்துகொண்டு வருகிறதே! குளமாவது, மேடாவது! என்பவர்தானே, அவர்!!

ஏதோ, நேரு பெருமகனுர் சம்மதமளித்ததால், குமரி கிடைத்தது! 'இல்லை' என்று டில்லி கூறிவிட்டிருந்தால் இவர் என்ன சீறிப் போரிட்டா பெற்றிருப்

# வஞ்சிக்குமானால் வடக்குதான் எதற்கோ?

பார்! குமரியாவது கிழவியாவது, உள்ளது போதும், போ, போ! என்றல்லவா பேசுவார்! இனி சிந்தித்துக் கருத்தளித்திடுவோர் குறித்துக் கவனிப்போம் வா. தம்பி, நமக்கேன், நாடாள்வதால் நாலும் செயயலாம் என்ற போக்குடன் உள்ளவர் பற்றிய கவலை.

பாரதம் என்ற பேரரசு இருக்கும்—புதிய தமிழகம் அதிலே ஓர் ராஜ்யம்—என்ற ஏற்பாடு, நிரந்தரமாக இருக்கவேண்டும் என்ற கருத்துடன்தான், கம்யூனிஸ்டும் ஆச்சாரியாரும் பேசுகின்றனர்.

தமிழ்நாடு தனி அரசு ஆகவேண்டும் என்று சொன்னாலே, அவர்களுக்குத் தலை சுற்றும்!!

ஆச்சாரியார், சென்னை ராஜ்யம் அளவில் சிறியதாகும் எனவே மத்திய சர்க்காரிலே செல்வாக்குக் கிடைக்காது என்று கூறுகிறார்—இதன் அடிப்படை உண்மை என்ன?

மத்ய சர்க்கார் நீதியாக நடக்காது.
மத்ய சர்க்கார் பெரிய ராஜ்யத்துக்குத்தான்
ஆதரவு தரும்.

என்ற கருத்து, வலுத்தவன் இளைத்தவனைக் கொடுமை செய்வான், பணக்காரன் ஏழையை அடிமை கொள்வான், என்பதுபோல இல்லையா! மத்ய சர்க்கார் என்ற அமைப்பிலே இருந்துகொண்டு நாம் செல்வாக்குப்பெற வேண்டுமானால், அதற்கு ஏற்ற கெம்பீரம் இருக்க வேண்டுமாம்!! இதிலிருந்தே தெரியவில்லையா, மத்திய சர்க்காருடைய போக்கின் இலட்சணம்!!

ஏதேதோ சொல்லவேண்டுமென்று எண்ணிக் கொண்டு எதைச் சொன்னால் தாட்சணியக் குறைவு ஏற்பட்டுவிடுமோ என்று பயந்து பயந்து ஆச்சாரியார் பேசுகிறார், மத்திய சர்க்கார் என்ற திட்டத்தை ஏற்றுக்கொள்ளும்போது, அதிலே சிறிய ராஜ்யமென்ன—பெரிய ராஜ்யமென்ன!! செல்வாக்கும் மதிப்பும் பெற வேண்டிய அவசியம் என்ன வந்தது? மத்திய சர்க்கார், நீதியாக நேர்மையாக நடக்காது என்ற சந்தேகம் கொள்வானேன்! அந்தச் சந்தேகத்துக்கு இடமிருக்கிற போது மத்திய சர்க்கார் என்ற திட்டத்துக்கு ஒப்பம் அளிப்பானேன்! ஆச்சாரியார் இதற்குப் பதிலளிக்கக் கடமைப்பட்டவர்—கிலியை அவரே கிளப்பி இருப்பதனால்.

கம்யூனிஸ்டுகளுக்கு இந்த அச்சம் இல்லை—அவர்கள் உத்தரப் பிரதேசத்தை விடச் சென்னைப் பிரதேசம் அளவில் சிறியதாயினும், அதன் காரணமாக, மத்திய சர்க்கார் பாரபட்சமாக நடந்துகொள்ளாது — என்று தைரியமளிக்கிறார்கள்.

தம்பி! நாமோ, இருவரும் அஞ்சிடும் திட்டம் கூறுகிறோம்—எதற்காக, மத்திய சர்க்காரின் ஆதிக்கத்தில், தமிழ் அரசை உட்படுத்துகிறீர்கள்—பிறகு, அங்கு நீதி கிடைக்குமா, கிடைக்காதா என்று விவாதம் நடத்திக் கொண்டு அல்லற்படுவானேன்-தனி அரசாக இருந்தால் என்ன? என்று கேட்கிறோம். உடனே மாறுபாடான கருத்துகளை விநியோகித்துக்கொண்டிருக்கும் ஆச்சாரியாரும் கம்யூனிஸ்டும் கைகோர்த்துக்கொண்டு, நம் எதிரே வந்து நிற்கிறார்கள்—தனி நாடா!! ஆகாது! ஆகாது! கூடாது! கூடாது!! பாரத்மாதாகீ ஜே!! என்று கோஷ மிடுகிறார்கள்.

தமிழ்நாடு—அளவில் சிறியது என்று ஆச்சாரியார் கூறும்போது கம்யூனிஸ்டுகள், அளவு பற்றி என்ன கவலை, அதற்காக அச்சம் கொள்வானேன் என்று பேசுகிறார்கள்,

தமிழ்நாடு கூட அல்ல, தமிழ்நாடு, ஆந்திரம், கேரளம், கருநாடகம்—இந்த நான்கும் மொழி வழி அரசுகளாக இருக்கும் நிலையில், ஓர் கூட்டாட்சி அமைத்துக்கொண்டு, பாரதப்பிணைப்பை நீக்கிக்கொண்டால் என்னய்யா, என்று நாம் கேட்கும் போதோ, ஆச்சாரியாரும், அவரைநோக்கி அஞ்சாதீர் என்று கூறிய கம்யூனிஸ்டும் கூடிக்கொண்டுவந்து நம்மைக் குட்டியபடி ஏடா! மூடா! சிறு சிறு நாடுகளாகப் பிரிந்தால் சீரழிவுதானே ஏற்படும் என்று குடைகிறார்கள்.

தம்பி! இவர்தம் போக்கை என்னென்பது!

ஆச்சாரியார் கொண்டுள்ள அச்சத்தைப் போக்கிக் கொள்ள அவர்காட்டும் பரிகாரம், தட்சிணப்பிரதேசம், அது ஒரு கலவை! தமிழகம், ஆந்திரம், கேரளம் கருநாடகம், எனும் மொழி வழி அரசுகள் கூடாது, கிடையாது—இவையாவும் ஒரே கொப்பரையில் போட்டுக்கொதிக்கவைத்துக் குழம்பாக்கி ஒரு வார்ப்படமாக்கவேண்டாமா—தட்சிணப் பிரதேசமென்று—இதை வார்த்தெடுத்து டில்லியிடம் காட்டி 'முத்திரை' பொறித்துக்கொள்ளவேண்டுமாம்-இது ஆச்சாரியாரின் அவியல்!!

கம்யூனிஸ்டு திட்டம் மொழிவழி அரசு இருக்கும், ஆனால் அது டில்லி காட்டும் வழி நடக்கும் என்பதாகும்.

நாம் கூறுவது, மொழிவழி அரசு அமையட்டும், பிறகு, ஓர் திராவிடக் கூட்டாட்சி அமைத்துக்கொண்டு டில்லியின் பிடியிலிருந்து விலகுவோம் என்பது!

கூட்டாட்சிக்கு 'திராவிட' என்ற அடைமொழி கொடுப்பதற்குக் காரணம், தமிழ், தெலுங்கு, மலையாளம் கருநாடகம் ஆகிய நான்கும் திராவிட இனத்தவர் இந்த நால்வர் என்பதாலும் ஆகும்.

தட்சிணப் பிரதேசம் என்ற நாமகரணத்தைக் காட்டிலும், திராவிட நாடு—கூட்டாட்சி என்று பெயரிடுவது வரலாறு, இலக்கியம் கல்வெட்டு, மொழி நூல் அறிவு எனும் பல்வேறு ஆதாரங்களைத் துணைகொண்டதாகும் ஆனால், இதனைக் கூறுகிற நாம் தம்பி, சாமான்யர்கள்! ஏழையின் பேச்சு அம்பலம் ஏறவில்லை!!

என்வே தம்பி, புதிய தமிழகம் அமைகிறது—அதிலே நமது நம்பிக்கையும் மலர்கிறது. மொழிவழி அரசு—திராவிடக் கூட்டாட்சிக்குத்தான் வழிகோலும் என்பது நமது திடமான நம்பிக்கை,

அந்த நம்பிக்கையுடனேயே நாம், புதிய தமிழக அமைப்பை, விழாவாகக் கொண்டாடுகிறோம்.

தீபாவளியுடன் அந்தத் திருநாள் இணைந்துவிட்டது—எனவே, திராவிட முன்னேற்றக் கழகம்; இந்த விழாக் கொண்டாடி இதிலிருந்து பெறக்கிடைக்கும் கருத்துகளை நாட்டு மக்களுக்கு எடுத்துக் கூற, வேறோர் நாளைக் குறித்திட வேண்டும் என்று உன் சார்பிலும் என் சார்பிலும், நமது பொதுச் செயலாளரை நான் கேட்டுக்கொள்கிறேன். வாழ்க தமிழகம்! வருக திராவிடம்!!

அண்ணன்,

(4—11—56 திராவிட நாடு இதழில்)

# போற்றி!

எங்கள் தமிழுக் கிறைவா, போற்றி!
இதய மலர்மிசை அமர்ந்தாய், போற்றி!
பொங்கும் அறிவுப் புனலே, போற்றி!
புதுமைக் கருத்தின் ஒளியே, போற்றி!

சங்கத் தமிழின் சுவையே; போற்றி!
சரித்திரங் காணுத் தலைவா போற்றி!
மங்காப் புகழின் பெரியோய், போற்றி!
மாண்புறு சிந்தனைக் குரியோய், போற்றி!

தமிழ்த்தாய் செய்த தவப்பய னாலே
தரணியில் உதித்த தகையே, போற்றி!
அமிழ்தச் சொல்மழை பொழிந்தாய் போற்றி!
அனைவரின் உளமும் கவர்ந்தாய், போற்றி!

அன்பிற் குவமை பகர்ந்தாய், போற்றி!
அடக்கத் தின்உரு வானாய், போற்றி!
பண்பின் சான்றாய்த் திகழ்ந்தாய், போற்றி!
பகைவரும் மதித்திடற் குகந்தாய், போற்றி!

பலவும் கற்றுத் தேர்ந்தாய், போற்றி!
பணிவை அணியாய்க் கொண்டாய், போற்றி!
உலகம் போற்றும் ஒருவ, போற்றி!
உண்மை யுழைப்பின் பெரும, போற்றி!

பண்புடை அரசியல் வகுத்தாய், போற்றி!
பார்புகழ் ஆட்சி கண்டாய், போற்றி!
மன்பதை போற்றிடத் திகழ்ந்தாய், போற்றி!
மாநிலத் துயிரின் உயர்வே, போற்றி!

கத்துந் திரைகடல் முத்தே, போற்றி!
கங்குலில் ஒளிதரு நிலவே, போற்றி!
எத்துறை தனிலும் வல்லாய், போற்றி!
எவர்க்கும் மிகவே நல்லாய், போற்றி!

ஏழையர்க் கிரங்கும் ஏந்தலே, போற்றி!
இனியநன் னெஞ்சம் வாய்ந்தாய், போற்றி!
வாழ வழிகள் பலர்க்குங் காட்டிய
வள்ளலே அண்ணா! நின்புகழ் வாழியே!

—மு. வாணி

# வான்புகழ் வள்ளுவம்

இல்லறத்தை நன்கியக்க ஏற்றவழி காட்டி,
இவ்வுலகில் தீமைமிகு பண்புகளைப் போக்க,
வல்லதொரு நூலதனைத் தானுமுடன் தேடில்,
வளமிகுந்த குறளினுக்கோர் இணையுமில்லை என்போம்!

ஆண்டிரண்டோர் ஆயிரங்கள் சென்றுவிட்ட போதும்
ஆற்றலுடைக் குறளெழிலுக் கோரழிவும் இல்லை!
மாண்புமிகு தீங்குறளின் மகிமைதனைச் சொல்ல
மண்ணுலகில் எம்மொழிக்கும் சொற்களுமே இல்லை!

நாடுமொழி இனங்கடந்து நல்லறிஞர் பலரும்
நம்குறளைத் தம்மொழியில் தாம்வரைந்து பணிவர்!
நீடுபுகழ் கொண்டகுறள் கூறுமொழி ஏற்று
நீளுலகில் வாழ்பவர்க்கோர் தொல்லையென்ப தில்லை!

அன்புணர்வும் அறஉணர்வும் இவ்வுலகில் எங்கும்
அன்றலர்ந்த நன்மலரின் வாசமெனப் பரவ
நன்னெறியை நண்குணர்த்தும் நல்லகுறள் தன்னை
நாமுயரத் தந்ததிரு வள்ளுவரைப் பணிவோம்.

தேன்சுவையும் பால்சுவையும் தீங்கனியின் சுவையும்,
தெள்ளுதமிழ் குறளினுடை சுவைக்குநிக ராமோ?
வான்புகழைத் தானுடனே கொண்டெழுந்த முப்பால்
வையகத்தில் நன்றுரைக்கா அறமெதுவும் இல்லை!

வள்ளுவமே நம்முடைய வேதமென ஏற்று
வள்ளுவனின் சீரடிகள் போற்றியுடன் வாழ்வோம்!
உள்ளமதில் உள்ளஇருள் போக்குமிளங் கதிராய்
உயரொளியை வீசுகுறள் செந்தமிழர் செல்வம்!

—மா. இல. குப்புசாமி.

# திருக்குறள் சிறப்பு

நன்பாலும் சுவையும்போல் செழுந்தமிழும்
விழுப்பொருளும் நயந்த செல்வம்,
வன்பாகும் மனவிருளை மாற்றியொளிர்
மணிவிளக்கம், மனிதர் தம்மை
அன்பாகும் நெறிதன்னில் நடத்திடுமோர்
அருந்துணைவன், அமுதும்! தேனும்!
இன்பாகும் கைத்திடச்செய் வள்ளுவனார்
முப்பாலை இனிதுண் போமால்!!

செவிதனிலே குண்டலமும் கையொளிரும்
செம்மையாய் வளையா பதியும்,
புவியேத்தும் மார்பில்சிந் தாமணியும்
புகழுஞ்சீர் மணிமேகலையும்,
குவிந்திருக்கும் திருவடியில் சிலம்புதானும்,
கொண்டிருக்கச், சூழும் பொய்மை
அவியத்தன் செங்கோலாய்த் திருக்குறளைத்
தாங்குதமிழ் நீடு வாழ்க!!

வாய்மையே திகழ்மார்பு, வண்டமிழில்
வடித்தெடுத்துத் துலங்கு மகத்தின்
தூய்மையே திருமுகமாம் மங்கலஞ்சூழ்
மணமாட்சி கண்கள், அன்பு
நேயமுறும் வேளாண்மை திருமேனி,
நிறையருளே முறுவல் கொண்டு
தாயமுதம் பொலிகின்றாள்—அறத்தேவி
திருக்குறளாத் தாள்பெற் றுய்வாம்!!

வேற்றுமையேன்? சாதிமதச் சச்சரவேன்!
வாரிதிசூழ் சகத்தீர்! வம்மின்!
ஏற்றமிகும் வள்ளுவனார் செய்தளித்த
பொதுநெறியைக் காணீர்! குருடன்
ஊற்றுக்கோல் போற்றல்போல் திருக்குறளை
உவகையால் கற்று நித்தம்
போற்றியுணர்ந் தெல்லோரும் ஒற்றுமையாம்
புவிபடைப்போம்! உண்மை! வெல்க!

—இரா. திருஞானசம்பந்தன்.

# முப்பால்

பாடிமகிழ் குயிலாலே சோலை யெல்லாம்
பகர்புகழைத் தமிழ்போலே பெற்ற தன்றோ!
நாடிவாழும் சிறப்பால் நிலப்ப ரப்பை
நாடென்று நாம்கூறு கின்றோம் நன்றே
நாடியினைப் பார்த்தன்றோ நோயைப் போக்க
நல்லதொரு மருத்துவரும் முயல்வா ரன்றோ
கூடிவாழும் மக்கள்தம் பண்பாட் டாலே
குவலயத்தோர் நாட்டினது சிறப்பைக் காண்பர்!

விதிவழியே இவ்வுலகம் நடக்கு தென்ற
வீணர்தம் வெற்றுரையைச் சாடு தற்குக்
கதிர்ஒளியின் தமிழ்ப்புலவன் செந்நாப் போதர்
கருத்துமணித் திருக்குறளை ஆய்ந்து தந்தார்
மதியிழந்து பகுத்தறிவு தனையி ழந்து
வாழ்கின்ற மானிடர்கள் வாழ்ந்து தேற
மதிப்புடைய வள்ளுவனார் பட்டு ணர்ந்து
வழங்கியநூல் முப்பாலில் தோய்வோம் வாரீர்!

—ச. அருணன்.

# கைவினைப் பொருள்கள்- ஒரு கண்ணோட்டம்!

(பி. ஜெயகர், கைவினைப்பொருள், கைத்தறிப் பொருள் கார்ப்பொரேஷன் தலைவர்)

பண்டைய காலத்திலிருந்தே இந்தியாவில் கைவினைத் தொழிலின் மரபு பல துறைகளிலும் இருந்து வருகிறது. மாறுபட்ட உருவத்தில் அது இன்னமும் இருந்து வருகிறது. கிராமங்களில் இருந்து வரும் கைவினைக் கலையை முதலில் எடுத்துக்கொள்வோம். உபயோகப் பொருள்களில் மட்டுமின்றி, மகிழ்ச்சியின் அறிகுறியாக உயிர்த்துடிப்பை வலியுறுத்தும் வகையில் உருவ உணர்வுடன் கைவினைப் பொருள்களை கிராமங்களில் தயாரித்து வந்தார்கள். களிமண்ணினால் குதிரைகளையும், யானைகளையும் செய்து உடைத்து, சாலை ஓரங்களில் போட்டார்கள். திருமண விழாக்களின் போது சில இடங்களில் இன்றும் கூட சுவரோவியங்களை வரைந்து, பிறகு வெள்ளையடித்து விடுகிறார்கள். கிராமங்களில் புதிதாய் செய்யப்படும் பொருள்களின் உருவங்களையும் எடுத்துக்கொள்கிறார்கள். சித்திர வேலைப்பாடுள்ள துணி வகைகளில் கிராமபோன்கள், விமானங்கள் ஆகியவற்றின் வடிவங்களைப் பார்க்கிறோம்.

இந்நாட்டில் பழங்குடி மக்களுக்காக கலை வேலைப்பாடமைந்த பொருள்கள் தயாரிக்கப்பட்டு வந்தது இரண்டாவது மரபாகும். இந்தப் பொருள்கள் பழங்குடி மக்களின் வாழ்க்கை முறையோடு நேரடித் தொடர்பு கொண்டவை. கடவுள் வழிபாடு இயற்கை வழிபாடு ஆகியவற்றை இவை சித்திரித்து வந்தன.

இலக்கிய உணர்வுடன் கூடிய மூன்றாவது மரபும் இருந்தது. மன்னர்கள், அவர்களது தர்பார்கள், மன்னர்கள் அமைத்த ஆலயங்கள் ஆகியவை சம்மந்தப்பட்டது இந்த மரபு.

கைவினைஞரின் குழந்தை, கலை வேலை சூழ்நிலையிலேயே வளர்ந்து வந்தான். வாழ்க்கையின் உயிர்த்துடிப்புள்ள உருவங்கள், வடிவங்கள், உத்திகள் ஆகியவை அவனுக்குத் தெரிந்தன. தந்தை மகனுக்கும், குரு சீடனுக்கும் அறிவைத் தந்தார்கள். கைவினைஞன்; வடிவமைப்பாளராகவும் இருந்தான். கவின் கலைகளுக்கும், கைவினைக் கலைக்கும் வேறுபாடு இருக்கவில்லை.

மொகலாய ஆட்சிக் காலத்தில் கைவினைக் கலை புத்துயிர் பெற்றது. நகைகள், பச்சை மணிக் கல்லினால் செய்யப்பட்ட கைவினைப் பொருள்கள் தந்தப் பொருள்கள், வெள்ளிப் பொருள்கள், சித்திரப்பூ வேலைப்பாடுள்ள பட்டுத் துணி வகைகள் போன்றவை அப்போது ஏராளமாக இருந்தன. ஆனால் மன்னரின் தர்பார்கள் சிதைந்ததோடு, கைவினைக் கலைக்கு மன்னரின் ஆதரவு குறைந்ததோடு, கைவினைஞர்களும் தங்களது பழைய தன்மையை இழந்தனர்.

சிந்து நதிப் பள்ளத்தாக்கிலிருந்து சுமர், உர் ஆகிய இடங்களுக்கு தொன்றுதொட்டே வாணிபம் இருந்து வந்தது. 3000 ஆண்டுகளுக்கு முன் இந்தியக் கப்பல்கள் தந்தப் பொருள்களையும் பட்டுத் துணிகளையும், பருத்தித் துணிகளையும், செதுக்கப்பட்ட மரப் பொருள்களையும், பாபிலோனியாவில் மன்னர் சாலமனின் தர்பாருக்கு எடுத்துச் சென்றன. இந்தியாவிலிருந்து கலை வேலைப்பாடமைந்த பொருள்கள் சைனாவுக்கும், கிழக்கு மத்திய ஆசியாவுக்கும் சென்றன. தென் இந்தியா, கிழக்கு இந்தியா ஆகியவற்றின் ஆட்சியாளர்கள் இந்திய கைவினை மரபுகளையும், கைவினைப் பொருள்களையும், இலங்கை, இந்தோனேஷியா, இந்தோசைனா பகுதிகளுக்கு எடுத்துச் சென்றார்கள்.

ஏற்றுமதி வணிகத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு இந்தியாவில் கைவினைப் பொருள் தயாரிப்பு நிலையங்கள் உருவாயின. மேற்கத்திய நாடுகளில் இந்திய மரபுகளின் அடிப்படையிலான வடிவமைப்பை விட, மேற்கத்திய நாட்டு மக்களின் தேவைக்கேற்ற வடிவங்களையே விரும்பினார்கள். இதன் காரணமாக வடிவமைப்பு கற்பனைத் திறன் படிப்படியாகக் குறைந்தது. கலப்பு வடிவங்கள் உருவாயின. இந்தியக்கைவினைஞர்களைத் தேர்ச்சி பெற்றகலைஞர்களாகக்கருதுவதற்குப் பதில் தொழிலாளர்களாகக் கருதினார்கள்.

தொழில் புரட்சியும் இந்தியாவில் கைவினைத் துறையை ஓரளவுக்குப் பாதித்தது.

ஆனால், 1947-க்குப் பிறகு கைவினைஞர்களின் பிரச்னைகள் அதிக அளவில் உணரப்பட்டு வந்தன. நாட்டின் பொருளாதார, கலாசார வாழ்க்கைத் துறையில் அவர்களது முக்கியத்துவம் உணரப்பட்டிருக்கிறது. கைவினைஞர்களின் பிரச்னைகள் சம்பந்தமாக அரசாங்கத்துக்கு ஆலோசனை கூறும் பொருட்டு அனைத்திந்திய கைத்தறி போர்டு, கைவினைப் பொருள்கள் போர்டு, கதர் கிராமத் தொழில்கள் கமிஷன் ஆகியவை அமைக்கப்பட்டிருக்கின்றன. பொருள்களைத் தயாரித்து விற்பனை செய்யும் பொருட்டு கைவினைஞர்களின் கூட்டுறவுச் சங்கங்களை அமைப்பதில் இவை உதவி புரிகின்றன. புதிய பொருள்களையும், புதிய கருவிகளையும் உருவாக்குவதற்காக ஆராய்ச்சி, வடிவமைப்பு, பரிசோதனைச் சாலைகள் அமைக்கப்படுகின்றன. கைவினைஞர்களின் பொருளாதார நிலைமை குறிப்பிடத்தக்க அளவுக்கு சீரடைந்திருக்கிறது.

துணிகளில் செய்யப்படும் சித்திர வேலைப்பாடு, மரப் பொருள்களில் செய்யப்படும் வேலைப்பாடு, மண்பாண்டத் தொழில், நகைத் தொழில் போன்று பல முக்கிய கைவினைத் தொழில்களும் இந்தியாவில் இன்று இருக்கின்றன. பொம்மைத் தயாரிப்பு, தந்தப் பொருள்கள் தயாரிப்பு, காற்றாடிகள் செய்வது, காகிதத்திலிருந்து விளையாட்டுப் பொருள்களைத் தயாரிப்பது போன்ற பல சிறிய கைவினைத் தொழில்களும் இந்நாட்டில் இருக்கின்றன.

ஆண்டுதோறும் சுமார் 50 கோடி ரூபாய் மதிப்புக்கு கைவினைப் பொருள்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

இந்தியாவில் இன்று சுமார் 30-லட்சம் கைத்தறிகள் இயங்குகின்றன. இவை மொத்தம் சுமார் 200-கோடி கஜம் துணிவகைகளைத் தயாரிக்கின்றன.

கைவினைத் தொழில் துறையில் கலை உணர்வின் அடிப்படையிலும், மனோதத்துவ அடிப்படையிலுமான நெருக்கடிதான் இன்று ஏற்பட்டிருக்கிறது. இருப்பினும் இன்றைய கைவினைஞர்கள் புதிய சூழ்நிலைக்கும், புதிய உத்திகளுக்கும் ஏற்பட இந்த சவாலை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். ●

# அம்புலியில் உறக்கம் வருமா; கனவு உண்டா?

—வால்ட்டர் பிராலிக்—

அடுத்த மாதம் அம்புலியிலிருக்கையில் அமெரிக்க விண்வெளி விமானிகள் நீல் ஏ. ஆர்ம்ஸ்ட்ராங், எட்வின் இ. எத்தனையோ "முதல் சாதனைகள்" புரிவார்கள் என்று எதிர்பார்க்கலாம். அவற்றில் ஒன்று அம்புலியில் உறங்குதல். ஆம் சந்திரனில் போய்த் தூங்கப்போகும் முதல் மனிதர்கள் அவர்களே!

அவர்கள் அங்கு பலப்பல அருஞ்செயல்கள் ஆற்ற வேண்டியிருக்கிறது. இதற்கு உரிய உடல் நலத்துடனிருக்கப் போதுமான ஓய்வு அவர்களுக்குக் கிடைக்குமா என்பதில் அமெரிக்காவின் விண்வெளித் துறை அதிகாரிகளுக்கு அக்கறை உண்டு.

கருவிகளையும், சுற்றுச் சூழ்நிலையையும் நுட்பமாகக் கணித்தல்; இமை கொட்டுவதற்குள் முடிவுகள் எடுக்கும் அருந்திறன்; பொறிகளைத் துல்லியமாக இயக்குதல் ஆகியவை விண்வெளி விமானிகளின் உயிர்க்காப்புக்கும் முயற்சியின் வெற்றிக்கும் இன்றையமையாதவை. ஆயினும் பயணத்தின் முக்கிய தருணங்களில் விமானிகள் களைப்புற்றிருந்தால் எல்லாம் கெட்டுப்போகக் கூடும்.

நிலவுப் பயணத்தில் விமானிகள் எந்தெந்த நிமிஷத்தில் எந்தெந்த விநாடியில் என்னென்ன செய்ய வேண்டுமென்பதுபற்றியகால அட்டவணை வகுப்பதில் இடைக்கிடையே ஓய்வு எடுத்துக்கொள்ளும் காலங்கள் இருப்பதற்கு முதலிடம் கொடுத்திருக்கிறார்கள். குறிப்பாக அவர்கள் மிகவும் கடினமான பணிகள் புரிவதற்கு முன்பு இவ்வகை ஓய்வு இன்றியமையாதது.

அப்பாலோ கப்பல் அம்புலியை நோக்கிச் செல்லும்போதும் நிலாவைச்சுற்றி வரும்போதும் விமானிகள் ஆர்ம்ஸ்ட்ராங், ஆல்டிரின், மைக்கேல்காலன்ஸ் ஆகிய மூவரும் எட்டுமணி வீதம் பல முறை ஒரே சமயத்தில் ஓய்வெடுக்க வகை செய்திருக்கிறார்கள். அவர்கள்முறை போட்டுக்கொண்டு தூங்குவதற்குப் பதில் ஒரே சமயத்தில் தூங்குவது ஏற்றது என்பது முன் அனுபவத்திலிருந்து புலனாகியுள்ளது.

தூங்கும் காலம் ஒரு தடவை கப்பல் புறப்பட்டு 85 மணி நேரம் கழித்து ஆரம்பமாகி ஆர்ம்ஸ்ட்ராங் ஆல்டிரின் ஆகிய இருவரும், தாய்க் கப்பலிலுள்ள ஒரு குழாய்ப் பாதை வழியாக நிலவு வாகனத்துக்குள் நிழைவதற்கு $2\frac{1}{2}$ மணி நேரத்துக்கு முன்பு முடியவேண்டும்.

தற்போதையத் திட்டப்படி இரு விமானிகளும் ஏறத்தாழ 35 மணி நேரம் தாய்க் கப்பலுக்கு வெளியில் இருப்பார்கள். அப்போது அவர்கள் விண்வெளியில் ஏன்? வேறு எங்குமே யாரும் செய்திராத கடும் பணிகள் புரியவேண்டும்.

தாய்க் கப்பலிலிருந்து நிலவு வாகனத்தைப் பிரித்து, கீழேயிறங்கி முன்பு நடந்தேயிராத அம்புலி இறக்கத்துக்கு நிலவு வாகனத்தை ஆயத்தப்படுத்த வேண்டும். அம்புலியின் மேல்பரப்பை ஆராய்ந்து வேலை செய்யவேண்டும். நிலாவிலிருந்து புறபட ஆயத்தமாக வேண்டும். பின்பு தாய்க் கப்பலைச் சந்தித்து அதனுடன் நிலவு வாகனத்தை இணைக்க வேண்டும்.

கூடுதல் ஓய்வு இல்லாமல் இந்த 35 மணி நேரமும் அவர்கள் முழுத் திறமையுடன் பணி புரிய முடியாது.

அம்புலி போய்ச் சேர்ந்ததும் விண் வெளி விமானிகள் முதலில் தமது வாகனத்தின் பொறிகளையும் ஏற்பாடுகளையும் சோதித்தறிய வேண்டும். ஏதாவது பெரிய பிசகு இருந்தால் உடனே அவர்கள் தாய்க் கப்பலுக்குத் திரும்பிவிட வேண்டும். ஆனால் எல்லாம் சீராக இயங்கினால், நிலவு வாகனத்திலுள்ள முக்கோணப் பலகணிகள் வழியாக எடுத்த எடுப்பில் அம்புலியின்மேல் என்னென்ன தெரிகிறது என்று அவர்கள் பார்வையிடலாம். பின்பு, 4 மணி நேரம் ஓய்வு எடுக்க வேண்டும். அப்புறம், நிலவு வாகனத்திலிருந்து, அம்புலியின் மேல் பரப்பில் இறங்குவதற்கு ஆயத்தம் செய்யவேண்டும்.

அம்புலிமேல் நடப்பதும் மாதிரிக்காக மேல் பரப்பிலுள்ள் பொருட்களைச் சேர்ப்பதும் விஞ்ஞானக் கருவிகளை அமைப்பதும், படமெடுத்தல் போன்ற வேலைகளைச் செய்வதும் களைப்பேற்படுத்தக் கூடும் விண்வெளிப் பயண அனுபவத்திலிருந்து, குறிப்பாக விண் வெளியில் சுற்றி வரும் கலங்களுக்கு வெளியே வந்து நடக்கும் அனுபவத்திலிருந்து, ஈர்ப்புக் குறைவான ஒரு சூழ்நிலை மிகவும் களைப்பூட்டுவதாகும் என்று புலனாகியுள்ளது.

எனவே, நிலவு வாகனத்துக்குத் திரும்பிவந்த பின்பு, ஓய்வெடுப்பதற்குரிய காலத்தை 4 மணி 40 நிமிஷம், விண் வெளி விமானிகள் விரும்பி வரவேற்பார்கள் என்பதில் ஐயமில்லை; அப்போது அவர்கள் பருமனான தமது நிலவு உடுப்புக்களைக் களைந்துவிடுவார்கள். அடுத்து அம்புலியிலிருந்து புறப்பட்டு, மீண்டும் தாய்க் கப்பலுடன் இணையத் தெம்பூட்டுவதற்கே இந்த ஓய்வு.

நிலவு வாகனத்தில் இடம் கொஞ்சம். இருக்கைகள் எதுவும் இல்லை, எனவே, விண்வெளி விமானிகள் சுருக்கி மடக்கிக்கொண்டு முடங்கிய நிலையில் தூங்க வேண்டும். எனினும் எழுத்தில் பார்க்கையில் பயணத் திட்டம் சிறப்பானது என்று விண்வெளி அதிகாரிகள் ஒப்புக்கொள்கின்றனர். இது சரியா என்பதற்கு உரைகல் பின்வரும் கேள்விக்குக் கிடைக்கும் பதில்தான்: விமானிகள் உண்மையிலேயே அம்புலியில் உறங்க முடியுமா?

## இதயம்

மனம் மனிதனின் ஒரு பகுதிதான்; இதயமே அனைத்தும் எனலாம்.

—ரீவரோல்

இதயத்தின் காரணங்களைப் பகுத்தறிவு புரிந்துகொள்ள முடிவதில்லை.

—பாஸ்கல்

ஆண்களும் பெண்களும், அறிவைக் காட்டினும் இதயங்களாலேயே இழுத்துச் செல்லப் பெறுகின்றனர். இதயத்திற்கு வழி புலன்கள்; கண்களையும் காதுகளையும் திருப்தி செய்தாலும் காரியம் பாதி கைகூடிவிடும்.

—செஸ்டர்ஃபீல்ட்

விண்வெளி விமானிகள் பணிப் பிரிவு நெறியாளர் டனால்டு கே. ஸ்லேட்டன் என்ன சொல்கிறார்? இவரே ஒரு விண்வெளி விமானி. மேலும் 11-வது அப்பாலோ விமானிகளுக்கு மேல் அதிகாரி. நீடித்த பயிற்சி, வானிலும், விண்வெளியிலும் பறந்து பெற்ற நீண்ட பழக்கம் இவற்றின் காரணமாக விமானிகள் தம்மை நன்கு அடக்கியாளும் திறமை பெற்றுள்ளனர். எனவே விரும்பியபோது ஓய்வெடுக்கவும் உறங்கவும் அவர்களால் முடியும் என்று அவர் கூறுகிறார். குறித்த காலம் முழுவதும் அவர்கள் தூங்க முடியாவிட்டாலும், ஓய்வு காரணமாக அவர்கள் அடுத்தபடி வேலைகள் செய்வதற்கு வேண்டிய புத்துணர்ச்சி பெறுவார்கள் என்றும் கூறினார்.

ஆனால் அவரது உதவியாளரும், துணை நெறியாளருமான கிரிஸ்டபர் சி. கிராப்ட் என்ன சொல்கிறார் தெரியுமா? தாமோ அல்லது ஹூஸ்ட்டன் தலைமையகத்திலுள்ள விண்வெளி ஊழியர்களோ மேலே சொன்ன 85 மணி நேரமும் தூங்கவே முடியாது என்று அவர் சொல்கிறார். அதிகப்பட்சம், தாமும் தம் ஊழியர்களும் முறை போட்டுக் கொண்டு அவ்வப்போது லேசாகக் கண்ணயரலாம். அவ்வளவுதான் என்கிறார். ஏனெனில், பூமியிலிருந்து 2½ லட்சம் மைல் தொலைவில் நிலாவில் நடக்கும் நிகழ்ச்சிகள் குறித்து அறிவதிலும் அறிவிப்பதிலுமே தங்கள் உள்ளமும் உணர்ச்சியும் ஒன்றிப் போயிருக்கும். எனவே தூக்கம் வராது என அவர் சொல்கிறார்.

விண்வெளி விமானிகளின் மருத்துவர் டாக்டர் சார்ல்ஸ் ஏ. பெரி என்ன சொல்கிறார்? "விமானிகளுக்குத் தூக்கம் வராவிடில், அவசியம் என்றால் அவர்களிடமுள்ள தூக்க மாத்திரைகளை அவர்கள் உட்கொள்ளலாமா என்று நான் முடிவு செய்வேன்" என்கிறார் டாக்டர் பெரி. இவர் ஏன் முடிவு செய்யவேண்டும்? அம்புலிப் பயணத்திட்டம் முழுவதிலுமே முக்கியமான பணிகளை விமானிகள் செய்யவேண்டிய நேரத்தில் அவர்கள் தூக்க நிலையில் இருந்துவிடக் கூடாது. எனவே தூக்கம் தேவையா எந்த அளவுக்கு—என்றெல்லாம் சீர்தூக்கிப்பார்த்து முடிவு செய்யவேண்டும்

நிலவு வாகனத்திலேயே தெம்பூட்டும் மருந்துகளும் உண்டு. ஆனால் உண்மையிலேயே அவசியம் ஏற்பட்டால் மட்டுமே அவற்றைப்பயன்படுத்த வேண்டுமென்பது அவரது எண்ணம். நிலாவிலிருந்து உடனே புறப்படவேண்டிய அவசியம் ஏற்பட்டால் விமானிகளது உணர்வைக் கூராக்குவதற்கே அவை பயன்படுத்தப்பெறும்.

விண்வெளி விமானிகள் அம்புலியில் உறங்குவார்களா?—உறங்கினால் எவ்வளவு நன்கு உறங்குவார்கள் என்பது மருத்துவ உடல் கூற்றுத் துறைகளைப் பொறுத்தவரை, அம்புலிப் பயணத் திட்டத்திலேயே முக்கியமான விவரங்களில் ஒன்றாக விளங்கக்கூடும். ஆனால் அம்புலியில் விமானிகள் உண்மையில் கனவு காண்பார்களா கண்ட கனவுகளைச் சொல்வார்களா இந்தக் கேள்விகளுக்குக் கிடைக்கும் பதில்கள், ஆராய்ச்சி அறிஞர்களுக்கும் ஆராய்ச்சி மாணவர்களுக்கும் நெடுங்காலத்துக்கு வேலை கொடுக்கும் என்பதில் ஐயமில்லை. ●

With the best compliments from:

**Ayyappan Industries**

TIRUPUR.



# சமுதாயச் சிந்தனைகள் (5)

அன்புள்ள நண்பா!

மூளையின் அடிமையாய் இருந்து இயங்கிக் கொண்டிருக்கும் இதயத்தின் இயக்கத்திலிருந்து சமுதாயச் சிந்தனைகளைத் தொடரலாம் என்று சென்ற கிழமை அறிவித்திருந்தேன்.

மனிதனது செயல்கள் அனைத்தும் எண்ணங்களின் மறுவடிவமே என்பது ஒருவகை தத்துவம். இதனைத் தான் 'உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்' என்றார் வள்ளுவனாரும். உயரிய எண்ணங்களைப் படைத்துக் கொள்ளும்போதுதான் உயரிய செயல்கள் முகிழ்க்கும்; உயரிய செயல் செயல்கள் முகிழ்க்கும்போதுதான் உயரிய பண்பாடு தோன்றும்; உயரிய பண்பாடு பிரதிபலிக்கப்படும்போதுதான் உயரிய சமுதாயம் உருவாக முடியும்; உயரிய சமுதாயம் உருவாகி வருகிறபோதுதான் சமுதாயச் சிந்தனைகள் என்பவைகளும், அவற்றின் எடுத்துக்காட்டுகளும் உயர்ந்த தன்மையிலே இருக்கும்.

ஒருவகையான பொதுத்தன்மையிலே இருந்து சமுதாயச் சிந்தனைகள் பற்றி ஆராய முற்படும்போது குறுக்கே வந்து அடிக்கடி தலைதூக்கிப் பாக்கும் மேல்—கீழ் பற்றியோ, 'உயர்வு—தாழ்வு' பற்றியோ சற்றே புறக்கணித்தும், சில வேளைகளில் தொட்டுப் பார்த்துக்கொண்டும் செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுவதைத் தவிர்க்க முடிவதில்லை.

எடுத்துக்கொண்ட ஒரு கருப்பொருளைச் சுற்றியே, ஆற்றொழுக்காகச் செல்வது என்பது எழுத்தாளனின் மேம்பட்ட சிறப்புத் தகுதிக்குரிய சொத்தாகும் என்பதை மறுப்பார் எவரும் இல்லை.

அல்லிக் குளத்தருகே. ஆரணங்கைக் காண்பதும், அள்ளித் தழுவிடவே ஆணழகன் ஏங்குவதும் ஒருவித பொதுத்தன்மைகள். அல்லிக் குளத்தைத் தேடி கிராமப்புறங்களுக்குச் செல்லவேண்டும் என்றால் நகரத்தாருக்கு முடியுமா? பஸ். கார், ரயில், கடற்கரை, கடைவீதி முதலான இடங்களில் காண முற்படுவதும், கடைக்கண் வீச முயலுவதும், அல்லிக் குளத்தருகே கண்டு, அள்ளித் தழுவ நினைத்தவன், எதற்காக அப்படி நினைத்தானோ அதற்காகவேதான் கடற்கரைக் கண்ணோட்டமும், கார், ரயில், கால் வருடலும் பயன்பட்டுப்போகின்றன. மொத்தத்தில் 'அவனும்—அவளும்' இணைய விரும்புகின்றனர் என்ற தத்துவம் தான் எல்லாதரப்பட்ட விளக்கங்களாலும் எடுத்துக் காட்டப்படுகிறது.

இதுபோலவேதான் சமுதாயச் சிந்தனைகள் என்பதனைப்பற்றி ஆராய்ந்து பார்க்க முனையும்போது ஒவ்வொருவரும், ஒவ்வோரிடத்திலிருந்து தம் சிந்தனைகளைத் தொட்டிருக்கக்கூடும், அல்லிக் குளக்கரையில் கண்டாலும், அங்காடி வீதியில் பார்த்தாலும், பார்வையின் பொருள் என்னவோ—அது ஒரே தன்மைக்குரியது என்பது வெளிப்படை.

பெரியார் ஈ. வே. ரா. அவர்கள் இந்தச் சமுதாயத்தைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்கிய சூழ்நிலை வேறு; பேரறிஞர் அண்ணா அவர்களது கண்ணோட்டம் வேறு. மற்ற மற்றப் பெரியவர்கள், பேரறிவாளர்கள் ஆகியோரது சூழல்கள் வேறு வேறு: அதுபோலவேதான் நண்பா, என் சமுதாயச் சிந்தனைகளின் காலமும், சூழலும்; தன்மையும் வேறு தரப்பட்டதாகும்.

தோன்றிய காலத்துச் சமுதாய அமைப்புக்களும் நடைமுறைகளும் இன்றில்லை என்பதற்கான வாதப் பிரதிவாதங்கள் நடைபெற்று முடிந்துவிட்டன.

அந்தக் காலத்து நடைமுறைகளையும், கொள்கைகளையும் அப்படி அப்படியே வைத்துத்தான் காண முற்படவேண்டும் என்று கூறுவதுகூட பத்தாம் பசலிக் கொள்கையாகி விடக்கூடும். கொள்ள வேண்டுவனவற்றைக் கொண்டு, தள்ள வேண்டுவனவற்றைத் தள்ளி, நுழைக்க வேண்டுவனவற்றை நுழைத்து ஒப்பனைப்படுத்த வேண்டும். அதிலேதான் இப்போதைய சூழலுக்குப் பொருளும் இருக்கும்.

ஆகவே, மனிதனைப்பற்றிய ஆராய்ச்சியிலீடுபட்டிருக்கிறோம் என்பதுதான் உண்மையாக இருக்க முடியும். இந்த மனித ஆராய்ச்சி சிலவேளைகளில் தனிமனிதனையும், சில சந்தர்ப்பங்களில் மனிதனைச் சார்ந்த குழுவினையும் — சமூகத்தையும் — தொட்டுக் காட்டுகிறது.

மனிதனைக்காண முயலும்போது ஒருவித உணர்ச்சி நமக்கு ஏற்பட்டுவிடுகிறது. மனித சமூகத்தைக்காண முயலும்போது இன்னொருவிதமான உணர்ச்சிக்கு ஆட்பட்டுவிடுகிறோம். வேறு வேறுபட்ட உலகத்திலே சஞ்சரிப்பதுபோன்ற உணர்ச்சி நம்மை ஏமாற்றிவிடுகிறது. ஒரே கருப்பொருளைச் சுற்றிச் செல்லும்போதில் தொடர்புடைய மற்றொன்றையும் தொட்டுக்காட்டப்படுகிறபோது உணர்ச்சிகள் மாறுபாடு கொண்டுவிடுகின்றன. ஆனாலும் நாம் சென்றுகொண்டிருக்கிற திசை ஒன்றுதான் என்பதனை எண்ணிக்கொள்ளவேண்டும்.

நண்பா! இறந்தகால நடைமுறைகள் பற்றி அவ்வப்

போது இணைத்துப்பார்ப்பது பயன்தரக்கூடும். ஆனால் அந்த நடைமுறைகளின் கூட்டு அறுவடையைத்தான் இப்போது துய்த்துக்கொண்டிருக்கிறோம். இதுநாள் வரையில் இதுபற்றிப் பேசியவர்கள் அத்தனைப் பேரும் அதுபற்றி எடுத்துக் காட்டிவிட்டுத்தான் தம் புதிய சிந்தனைகளைத் தந்துபோயிருக்கிறார்கள். மீண்டும் மீண்டும் அவைபற்றியே எடுத்துக் காட்டிக்கொண்டிருக்க வேண்டுமென்று விரும்புவதனை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. முடிகிறது என்று ஒப்புக்கொண்டாலும், அது அத்தனை அவசியமானது என்று ஏற்றுக் கொள்ள முடியவில்லை. தேவைப்படுகிறபோது, தேவைப்பட்ட கருத்துக்கு, பண்டைய கருத்துக்களை ஒப்பு நோக்கிக் கொண்டால் போதுமானது.

சமுதாயச் சிந்தனைகள் என்ற கண்ணோட்டத்தில், இன்னும் முழுமையாக ஒரு கருத்தினைத் தெளிவு படுத்திவிடவில்லை. சமுதாயத்தைச் சுற்றியுள்ள சூழல்களையும் நடைமுறைகளையும், நிலைமைகளையும் மட்டிலுமே தொட்டுத் தொட்டுப் பார்த்துக் கொண்டிருக்கிறேன். தேன் எடுக்க முனைகிறேன்—தேனீக்கள் சுற்றிச் சுற்றி வருவதையும் காண்கிறேன். தேன் எடுப்பார்க்குச் சில தடுப்பு முறைகள் உண்டு; நான் எடுக்க விரும்பும் தேனுக்கு அந்தத் தடுப்பு முறைகள் உண்டா? நீயே நினைத்துப்பார்!

போகட்டும் நண்பா! மனிதனைக் காண இனி ஆயத்தப்படுத்திக்கொள்வோம்.

ஒரு மனிதன், தான் எப்போதும் வாழ்ந்ததைவிட இன்றைக்கும், இன்றைவிட நாளைக்கும் நன்றாக வாழ வேண்டும்—வளமாக வாழவேண்டும் என்று எண்ணுகிறான். சுற்றுச் சூழல்களும் சந்தர்ப்பச் சூழல்களும் அவனை அவ்வாறு எண்ணவும் செய்கின்றன. இதனைத் தீய எண்ணம் என்று வருணித்துவிட முடியாது.

ஒவ்வொரு தனி மனிதனும் தான் வாழவேண்டும் என்று கருதுவதனை, பல மனிதனின் எண்ணங்களோடு கூட்டிப் பார்க்கும்போது, அதுவே சமுதாய எண்ணமாகி விடுகிறது.

ஆக, சமுதாயம், நேற்றைவிட, இன்றைக்கு நல்வாழ்வு வாழவேண்டும் என்று கருதுகிறது. ஆனால் தனி மனிதனோ, சமுதாயமோ, அந்த நல்வாழ்வினைப் பெற தேர்ந்தெடுத்துக் கொள்ளும் முறையிலே அல்லவா பிரச்னைகள் பிறப்பெடுக்கின்றன.

தேர்ந்தெடுத்துக் கொள்ளும் முறை என்பதனைத்தான் நண்பா, நான் இதயத்தின் படைப்புக்களாகக் கொள்கிறேன். இந்த இதயத்தின் படைப்புக்களின் எதிரொலிகள்தான் இன்று சமுதாயப் பிரச்னைகளாகி, சமூகநீதி அல்லது சமூக அநீதி என்ற விமர்சனத்துக்கு உட்பட்டவையாகிக் கிடக்கின்றன. ஆக இதயம் என்பது, மனிதனை நல்ல வழியில், அல்லது தீயவழியில் நடத்திச் சென்று கொண்டிருக்கிறது.

நன்னெறிப்பட்டு தன் வாழ்க்கை முறையினை வகுத்துக்கொள்வோனும், நல்வாழ்வு வாழவேண்டு மென்று தான் விரும்புகிறான்; முனைகிறான். தீநெறியால் இயங்குவோனும் நல்வாழ்வு தேடித்தான் அலைகிறான்; செயல்படுகிறான்.

நன்னெறியால் இயக்கப்படுவோனும் சில வேளைகளில் தீநெறிக்கு ஆட்பட்டு விடுகிறான்; தீநெறியில் இயங்குவோனும் நன்னெறியின் பக்கம் வந்து போகிறான். எல்லாவற்றுக்கும் வகுத்துக் கொள்கின்ற முறைகளே காரணமாக அமைந்துவிடுகின்றன. சில வேளைகளில் வகுத்துக்கொண்ட வழி, நேரியதாயினும் எதிர்பாராத நிகழ்ச்சிகள் தடம்புரட்டிவிட்டு விடுவதையும் எதிர்பார்க்க வேண்டி நேரிட்டு விடுகிறது.

ஆனால் இதயத்தின் இயக்கம்தான் இதுபோன்ற நல்லது அல்லது தீயது என்று கூறத்தக்க விளைவுகளைத் தோற்றுவிக்கின்றன.

இந்த இதயம் நண்பா, கடந்த பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளாகப் பண்பட்டு வந்திருக்கிறது என்கிறார்கள். சில வேளைகளில் புண்பட்டும் போயிருக்கிறது என்பதனையும் அறிய முடிகிறது.

இன்றைய நடைமுறையில் மனிதன் ஒவ்வொருவனுடைய இதயமும் புண்பட்டுப் போயிருக்கிறது என்ற கருத்துதான் பெரும்பான்மையுடையதாகவிருக்கிறது.

வாழவேண்டும்—என்று எண்ணத் தொடங்கிய மாத்திரத்திலேயே, மனம் நொந்து போகிறது. சுமையாகி—சுமக்க முடியாத அளவுக்கிருக்கும் வாழ்க்கையினை, எப்படிப் பெறுவது? ஏற்பது என்ற கவலை குடையத் தொடங்கிவிடுகிறது. எனவே வாழ்க்கையினைப் பெற, எப்படியாவது முயல்வோம் என்ற எண்ணத்தை இதயம் ஈன்று தந்துவிடுகிறது. விளைவுகள் விபரீத நிலைகளைத் தோற்றுவித்து விடுகின்றன. தனி மனிதனை விட்டு விட்டு, பெரும்பான்மை மனிதர்கள் என்னும் சமூக அமைப்பின் வழியாக இதுபற்றிக் கண்ணோட்டம் செலுத்தும்போது, சமுதாயத்தில் அநீதிகள் மலிந்து விட்டன என்று சட்டெனகூறத் தோன்றிவிடுகிறது.

இதயத்தைத் தூயதாக வைத்துக் கொள்ளவேண்டும் என்றுதான் அன்று முதல் இன்றுவரை, மனிதனுக்கு அறிவுரை கூறவந்த அத்தனைப் பேரும் சொல்லியிருக்கிறார்கள்.

இதயத்தைத் தூய்மைப்படுத்தும் வழி என்பதன் பேரால் ஆத்திகக் கருத்துகளை, ஆத்திகர்கள் எடுத்து வைக்கிறார்கள். சீர்திருத்தவாதிகள் என்போர் ஆத்திக முறை தவறானது. அதனாலேயே இதயம் கெட்டழிந்து, மனிதன் சீர்குலைந்து கொண்டிருக்கிறான்; காட்டுமிராண்டித்தனமான வாழ்க்கை முறையினை மேற்கொண்டிருக்கிறான்; எனவே அந்த ஆத்திக நெறிகள் தீயவை; கேடு பயப்பவை. அதனால் புதுமை வழியினை மேற்கொள்ள வேண்டும்! ஆத்திகத் தன்மையுடன் கூடிய அறவுரைகளையும், நீதி நெறிகளையும் ஆழக் குழி தோண்டிப்புதைத்து விடவேண்டும்; ஒரு புதிய சமுதாயத்தைத் தோற்றுவிக்க வேண்டும் என்கிற வகையிலே போதித்துக் கொண்டிருக்கிறார்கள்.

சீர்திருத்தக் கருத்துக்கள், பரவும் வேகம், ஆத்திகக் கருத்துக்களும், நடைமுறைகளும் பரவுகின்ற வேகத்தைவிட மிகமிகக் குறைவானது. குறைந்த வேகமுடைய அறிவார்ந்த நடைமுறைகளை, கடிய வேகத்தில் ஓடிக்கொண்டிருக்கிற ஆத்திக வழிப்பட்ட அறிவுரைகள் தோற்கடித்து விடுகின்றன. சீர்திருத்தக் கருத்துக்களை, மதக்கருத்துக்கள் வெற்றிகண்டு விடுகின்றன.

நல்லது என்று ஒன்றை அனுமானித்துக்கொள்ளும் முன்னதாக, தீயவைகள் இதயத்தில் முன்சென்று இடம் பற்றிக்கொள்ளுகின்றன. எனவே நன்னெறிகளும், தீநெறிகளும் ஒன்றையொன்று மோதிக்கொள்கின்றன. சரி, தவறு என்று தீர்மானத்துக்கு வந்து செயல்படும் முன்னதாக நிகழ்ச்சிகள் நடைபெற்றுவிடுகிறபோது,

நீதி, அல்லது அநீதி என்று கூறத்தக்கவைகளாகி விடுகின்றன அவை.

எனவே, மனிதன் அநீதிகளையே இழைக்கிறான் என்றோ, நீதி வழிப்படிதான் நடக்கிறான் என்றோ சட்டென்று கூறிவிட முடிவதில்லை. ஆயினும் அந்த நிலையிலுள்ள மனிதன் வாழ்ந்து தீரவேண்டுமே!—எனவேதான் எப்படியாவது வாழ்வது என்ற நிலைக்குத் தன்னைத் தயார்ப்படுத்திக் கொள்கிறான்.

எப்படியாவது வாழ்வது என்று தீர்மானித்துக் கொண்டு நடைமுறைகளை மேற்கொள்வதென்பது பொதுவிதி என்று எடுத்துக்கொள்ளலாம். ஆனால் இப்படித்தான் வாழவேண்டும் என்று ஒழுகுவாரது எண்ணிக்கை சமூகத்தில் அதிகபட்சமாகவிருப்பதில்லை. இப்படித்தான் என்று ஒழுகும் முறை நன்னெறிப்பட்டதாயின், கேடொன்றும் ஏற்படாது. அந்த முறை அதிகம் பேரிடத்திலும் கால்கோலி இருக்கமுடியாது. யாரோ சிலரிடத்து மட்டுமே நின்று வழி நடத்திக் கொண்டிருக்கும் இது. சமுதாயத்தில் ஒரு பெரிய மாறுதலை ஏற்படுத்திவிடாது; அதுபோலவே பிரச்னைக்குரிய ஒன்றாகவும் தன்னைக் காட்டிக்கொள்ளாது. இதுபோலவே, இப்படித்தான் என்ற வழியில் தீநெறிப்பட்டு ஒழுகும் முறையும் சிறுபான்மையதாகவேதான் இருக்கும். ஆனால் இந்தச் சிறுபான்மை ஒழுக்கம்தான், அது தீநெறி என்பதனால் பெரும்பான்மைச் சமுதாயத்தில் சட்டென்று தன்னை எடுத்துக்காட்டும் அளவுக்குத் தலைதூக்கிக்கொண்டிருக்கும். எதெற்கெடுத்தாலும் பட்டென்று, சமூக அநீதி மலிந்துவிட்டது பாரீர்! என்று மேடைப் பேச்சாளர்கள் எடுத்துக்காட்டுகின்ற நிலைமையைத் தோன்றுவிக்கக்கூடியதாகவும் இருக்கும்.

இந்த நிலைமைக்கிடையேதான் நண்பா, இதயம் தேர்ந்தெடுத்துக்கொண்டு இயங்கவேண்டிய கொள்கைகள், கோட்பாடுகள் சீர்குலைவுற்றுக் கிடக்கின்றன. தானாகவே காலப்போக்கால், முதிர்ச்சியால், மாறுபாட்டால் சீர்குலைந்தவை சில. மதவாதிகளாலும், சீர்திருத்தவாதிகளாலும் சீர்குலைந்தவை சில.

''மத மாற்றம்'' என்பதுபோலவே உண்டாக்கப்பட்ட இந்த மனமாற்றங்களால்தான் இன்றைக்கு இது போன்ற பிரச்னைகளே உண்டாகி இருக்கின்றன.

இந்த அறிவுப் போட்டியிலேதான் மனிதன் மயக்கமடைந்து கிடக்கிறான். இதயத்துக்கேற்ற ஒரு இனிய கொள்கையைத் தேடிக்கொள்ள முடியாதவாறு தடுக்கப்பட்டிருக்கிறான். எப்படி என்பதை அடுத்துக் காண்போம்.

அன்புள்ள,

திருவாரூர் முத்துராமன்

---

4-ம் பக்கத் தொடர்ச்சி

ஆத்திரமா இருக்கே, கோபத்தினாலே நியாயத்தைக் காப்பாற்ற முடியாது'' என்று குருசாமி சொன்னார்.

படபடப்பாக எதையோ பேச நினைத்த நாகப்பன் அமைதியாக அடங்கிவிட்டான்.

மீண்டும் குருசாமி பேசினார்.

வடிவேலு தகாதமுறையில் நடந்திட்டான்னு சொன்னே. தெளிவா யோசிக்கும்போது அது குற்றமா எனக்குப்படலே.

அவன் மட்டும் தகாதமுறையில் எப்படி நடக்கமுடியும்? உன் தங்கச்சியும் விரும்பத்தானே இருந்திருக்கா. நீதான் சொன்னியே அவ வடிவேலை விரும்பினான்னு ரெண்டுபேரும் கணவன் மனைவியா வாழ ஆசைப்படறாங்க. அவுங்களை வாழவைக்க வேண்டியபொறுப்பு உன்னுடையது. அதை விட்டுட்டு வடிவேலைக் கொல்லப்போறேன்னு சொல்றே. நல்லா யோசிச்சுப்பாரு. நீ அவனைக் கொலை செய்தா அவன் செத்திடலாம் அதற்காக உனக்கு தண்டனை விதித்து நீயும் செத்துவிடலாம்.

ஆனா......காலம்...? அது சாகக் கூடியது அல்ல.

நீ கொலைக்காரனுங்கறது தலைக்குத் தலைமறையாது. காலமும் செத்துப்போறதா இருந்தா நீ எந்தப் பாவத்தையும் செய். நான் வேண்டான்னு சொல்லலே. அப்ப உன்னைக் கொலைகாரன்னு உலகம் சொல்ல வழி இல்லை. குருசாமி நீண்டநேரம் பேசி நிறுத்தினார். அவருடைய பேச்சை அமைதியாகக் கேட்டுக்கொண்டு வந்த நாகப்பன். ''ஐயா, என்னை என்ன செய்யச் சொல்றீங்க?'' என்று ஒன்றும் புரியாமல் கேட்டான். குருசாமி மறுபடியும் பேசினார்.

நாகப்பா சொன்னதையேதான் சொல்றேன். காலங்களுக்குச் சாவில்லை. நல்லது செய்தா புகழ்ச்சியும் கெட்டதைச் செய்தா இகழ்ச்சியும் என்றைக்கும் இருக்கும். அதனாலே நீ உன் தங்கச்சிக்கு அவ விருப்பம் போல. வடிவேலை மணமகனுக்கு. வாழ்க்கைத் துணைவனாகச் செய்து நல்ல காரியத்தைச் செய்தவனுங்கற பேர் எடு'' என்றார்.

மீண்டும் மீண்டும் பலவாறு சிந்தனையிலிருந்தான் நாகப்பன். அவனுடைய மனதுக்குள்ளாக—குருசாமி சொன்னதெல்லாம் நியாயமாகவேபட்டது அன்று இரவெல்லாம் அவர் வீட்டிலேயே தங்கிவிட்டு. அடுத்த நாள் கிராமத்துக்குப் புறப்பட்டான்.

அவன் ஊர் வந்து சேர்ந்ததும் கடலைக்காரப் பாட்டி வீட்டுக்குத்தான் முதலில் போனான். பாட்டியிடம் கண்ணம்மாளுக்கும் வடிவேலுக்கும் கல்யாணம் செய்யப் போவதாகச் சொன்னான். அந்தச் செய்தி பாட்டிக்கு இனிப்பாக இருந்தது.

''மகராசனா செய்யிடா அப்பா'' என்று அவள் தன் சந்தோஷத்தையும் காட்டிக்கொண்டாள். உடனே கண்ணம்மாளிடம் ஓடினாள். அந்த இனிப்பானசெய்தியைச் சொன்னாள். கண்ணம்மாளுக்கு வந்த மகிழ்ச்சியை மலையளவு என்பதா? அல்லது கடலளவு என்பதா? அவளை கேட்டால் உலகளவு என்றுதான் சொல்லுவாள்.

ஒரு மாதம் ஓடி மறைந்தது. பல ஊர் சுற்றிவிட்டு வடிவேலு ஊர் வந்து சேர்ந்தான். நாகப்பன் அவனை அழைத்துக் கல்யாணத்துக்கு நாள் வைத்தான்.

நாளும் வந்தது. மணமும் முடிந்தது. நாகப்பனுடைய உள்ளமும் பூரித்தது. நல்ல செயலுக்குச் சொந்தக்காரனாகிவிட்டான் அவன். காலமெல்லாம் அது பேசப்படும், பாராட்டப்படும்.

அதற்குத்தான் சாவில்லையே!

## கேட்டீரா சேதி!

இந்திய ஜனநாயகத்துக்கு, இவ்வளவு பெரிய சோதனையை, பீகார் மாநிலம் இத்தனைக் குறுகிய காலத்துக்குள் கொண்டு வரும் என்பதை யாரும் எதிர்பார்த்திருக்க முடியாதுதான். 1967 பொதுத் தேர்தலுக்குப் பின்னும், 1969 பிப்ரவரியில் நடைபெற்ற இடைத் தேர்தலுக்குப் பின்னும், அமைக்கப்பட்ட ஐந்து அமைச்சரவைகள் கவிழ்ந்தும், கவிழ்க்கப்பட்டும் போயிருக்கின்றன. பொதுத் தேர்தலுக்குப் பின் முதன் முதலாக மகாமாயபிரசாத் சின்கா தலைமையில் காங்கிரசல்லாத கூட்டணி அமைச்சரவை அமைக்கப்பட்டு, அது ஓராண்டுக்குப் பின் கவிழ்க்கப்பட்டது. அதை அடுத்து காங்கிரசுக் கட்சி அமைத்த கூட்டணி வலையிலே கட்சி தாவல் வேலைகள் மிகுந்து போனதனால் விரைவிலேயே கவிழ்ந்தது. அப்புறம் போலா பஸ்வான் சாஸ்திரி தலைமையில் காங்கிரஸ் அல்லாத கூட்டணி அரசு அமைக்கப்பட்டு. அதுவும் கவிழ்ந்துபோயிற்று. அதனால் குடியரசுத் தலைவரின் ஆட்சியேற்பட்டு, பின்னால் இடைத்தேர்தல் நடைபெற்றது. இடைத்தேர்தலில் மீண்டும் கூட்டணியே ஆளவேண்டிய நிலை. காங்கிரஸ் தலைமை, ஹரிஹர்சிங் என்பவரைக்கொண்டு ஆட்சி அமைத்தது. யார் யாருக்கு அமைச்சர் பதவி தருவது என்ற பேரம் முடிவுக்கு வராததால் அதுவும் கவிழ்ந்து மறுபடியும் சாஸ்திரி தலைமையில் கடந்த 22ம் நாள் அமைச்சரவை அமைக்கப்பட்டு, 10 நாட்களுக்குள் வீழ்ச்சியடைந்து விட்டது. இதற்கான காரணத்தைக் கண்டாய்ந்து உடனடியாய்க் களைய முற்படாவிட்டால் இந்திய ஜனநாயகம் கேலிக்கூத்தாக்கப்படுவது மட்டுமல்லாமல், பீகார் மக்களது அமைதியான வாழ்க்கையின் அஸ்திவாரம்கூட ஆட்டங்கொடுப்பதினின்றும் தடுக்க முடியாது.

• • •

மனிதன் தன்னை எவ்வளவு கீழானவனாக ஆக்கிக் கொண்டிருக்கிறான் என்பதற்கு ஏராளமான எடுத்துக்காட்டுகள் கிடைத்துக் கொண்டிருக்கின்றன. வயிற்றை நிரப்பிக்கொள்வதற்கு எந்த வழியையும் மேற்கொள்ளலாம் என்ற நிலை, நாளும் நாளும் வளர்ந்து கொண்டே இருக்கின்றது. கூலித் தகராறு என்றால் குடிசைக்குள் குடும்பத்தையே வைத்துக் கொளுத்தவும் தயார் என்று ஒரு கூட்டம் செயல்படுகிறது. இன்னொருபக்கம் நிர்வாகத்தையே கேரோ’ செய்து அடிதடியிலும் இறங்குகிறது. வேறோர் பக்கம், நிர்வாகத்தினரையும், ஊழியர்களையும், அதிகாரிகளையும்கூட பூட்டிவைத்து தீயிட முயற்சிக்கிறது. உழைக்கும் வர்க்கம், பெறுகின்ற கூலிக்கு இயைய, பணியாற்றவேண்டும் என்று நிர்வாகம் நினைப்பது தவறு என்று சொல்ல முடியுமா? நம் நாட்டுத் தொழிலாளர்களுக்கு துரதிருஷ்டவசமாக அதிக உழைப்பு—அதிக ஊதியம் என்ற தத்துவும் ஏற்றுக்கொள்ளமுடியாததாயிருக்கிறது. அதிக உழைப்புக்கூட வேண்டாம்; உரிய காலத்துக் குரிய அளவாவது உண்மையாய் உழைக்க வேண்டும் என்று கூட ஒப்புக்கொள்ள முடிவதில்லை. டெல்லித் தலைநகரில் இப்படியொரு நிகழ்ச்சி இந்தக் கிழமை நடைபெற்றிருக்கிறது. 400-தொழிலாளர்கள், எட்டு மணி நேரத்தில், உரிய வேலைகளைச் செய்யாது திரிந்துகொண்டும், அலைந்து கொண்டு மிருந்தார்கள் என்பதற்காக, இந்த மாதத்துக்குரிய ஊதியத்தை, அவர்கள் வேலை செய்த நேரத்தைக் கணக்கில்கொண்டு, அதன் அடிப்படையில் கொடுத்திருக்கிறார்கள். ஊதியம் குறைந்ததே என்று ஆத்திரமடைந்தோர், உற்பத்தியோ அல்லது சேவையோ குறைந்ததே என்று எண்ணவில்லை. ஆனால் ஊதியத்தைக் குறைத்த நிர்வாகத்தைக் கூண்டோடு கைலாயம் அனுப்ப மட்டும் நினைக்க முடிந்திருக்கிறது. போலீஸ் தலையிட்ட போது இரு அதிகாரிகள் உட்பட பலரைப் படுகாயப்படுத்த முடிந்திருக்கிறது. கல் வீச்சு நடத்த முடிந்து இருக்கிறது. தொழிலாளர் பிரச்னை இப்படியே வளர்த்துவிடப்படுமானால், அப்புறம் "குடும்பக் கட்டுப்பாடு" பிரச்னைக்கு அவசியம் இல்லாமலேயே மக்கள் தொகை குறைய வழி யேற்படக் கூடும் இல்லையா!

• • •


**அடுத்த இதழில்**

அறிஞர் அண்ணா
அவர்களின்

# மூவர் முரசு

என்ற
தம்பிக்கு மடல்
இடம் பெறுகிறது.




ஆசிரியர், வெளியிடுபவர் சி.என்.ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-3